தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### அரிசி மீதான சேவை வரி ரத்து



**புது தில்லி,**

அரிசி மீதான சேவை வரி ரத்து செய்யப்படுவதாக மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் திங்கள்கிழமை தாக்கல் செய்த இடைக்கால பட்ஜெட்டில் அறிவித்தார்.

இந்த விவகாரத்தில் தமிழக கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்திய அரசு பணிந்துள்ளது.

2014-15ஆம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்த ப. சிதம்பரம் கூறுகையில், "அரிசி மீது சேவை வரி விதிக்கப்படுவது என்பது பொருத்தமான நடவடிக்கை அல்ல. ஆகையால், அரிசி சேமித்தல், கிடங்குகளில் இருந்து ஏற்றுவது, இறக்குவது, கையாள்வது ஆகியவற்றுக்கு சேவை வரி ரத்து செய்யப்படுகிறது' என்று கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக கடந்த சில தினங்களுக்கு முன்பு தமிழக முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதியிருந்த கடிதத்தில், "சேவை வரிச் சட்டத்தை நியாயமற்ற முறையில் மத்திய நிதியமைச்சகம் பயன்படுத்தி அரிசி மீது சேவை வரி விதித்துள்ளது. இது, அரிசியை பயன்படுத்தும் தெற்கு மற்றும்

கிழக்கு மாநில மக்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும். அரிசி விலையும் உயரும். ஆகையால், இந்த விவகாரத்தில் பிரதமர் தலையிட்டு அரிசி மீது விதிக்கப்பட்டுள்ள சேவை வரியை ரத்து செய்ய வேண்டும்' என்று வலியுறுத்தியிருந்தார். இதே கோரிக்கையை கடந்த சில தினங்களுக்கு முன் பிரதமரை சந்தித்த தேமுதிக தலைவர் விஜயகாந்தும் வலியுறுத்தினார்.

இந்த விவகாரத்தில் திமுக தலைவர் கருணாநிதி, மதிமுக பொதுச் செயலர் வைகோ, பாமக நிறுவனர் ராமதாஸ் உள்ளிட்ட தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளும் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தன.

**எரிபொருள், உணவு, உர மானியத்துக்கு ரூ.2.46 லட்சம் கோடி**

**புது தில்லி,**

2014-15-ஆம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டில் எரிபொருள், உணவு மற்றும் உர மானியமாக ரூ.2,46,397 கோடி மதிப்பிடப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

சிதம்பரம் மேலும் கூறியதாவது:

2013-14-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் எரிபொருள், உணவு மற்றும் உர மானியமாக ரூ.2,20,971.50 கோடியாக மதிப்பிடப்பட்டது. இது, 11 சதவீதம் உயர்த்தப்பட்டு ரூ.2,45,452 கோடியாக திருத்தி மதிப்பிடப்பட்டது.

இதிலிருந்து, 2014-15-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் சிறிது உயர்த்தப்பட்டு ரூ.2,46,397 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், திட்டமிடப்படாத செலவினங்களுக்காக ரூ.12,07,892 கோடி மதிப்பிடப்பட்டுள்ளது.

2013-14-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் ரூ.85,480 கோடியாக இருந்த எரிபொருள் மானியம், 2014-15-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் ரூ.63,426.95 கோடியாக திருத்தி மதிப்பிடப்பட்டுள்ளது.இந்த மானியம், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் டீசல், மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர் ஆகியவற்றை குறைந்த செலவில் வழங்கி வரும் எண்ணெய் விற்பனை

நிறுவனங்களான ஐ.ஓ.சி., பி.பி.சி.எல். மற்றும் எச்.பி.சி.எல் ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

எரிபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் பொறுப்பு எண்ணெய் உற்பத்தி செய்யும் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதால், அந்நிறுவனங்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையின் தேவை குறைந்துள்ளது. எனவே, பட்ஜெட்டில் மானியம் குறைக்கப்பட்டுள்ளது.2013-14-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் ரூ.92,000 கோடியாக திருத்தியமைக்கப்பட்ட உணவு மானியம், 2014-15-ஆம் நிதியாண்டுக்கு ரூ.1.15 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை பொது விநியோகத் திட்டத்துக்கு வழங்கப்படும். இதில், ரூ.88,500 கோடி உணவு பாதுகாப்புச் சட்டத்துக்காக வழங்கப்படுகிறது.

2014-15-ஆம் ஆண்டுக்கான உர மானியமாக ரூ.67,970 கோடி மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், யூரியா உர இறக்குமதிக்கு ரூ.12,300 கோடியும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் யூரியாவுக்கு ரூ.31,000 கோடியும், விற்பனை செய்யப்படும் உரங்களுக்கு ரூ.24,670 கோடியும் மானியமாக வழங்கப்படும் என்று சிதம்பரம் கூறினார்.

## அரிசிக்கு சேவை வரி இல்லை

**புதுதில்லி,**

நாடாளுமன்ற மக்களவையில் இந்த நிதியாண்டுக்கான பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் ப.சிதம்பரம், அரிசிக்கான சேவை வரி விதிக்கப்பட மாட்டாது என்று கூறினார்.

முன்னதாக அரிசிக்கு சேவை வரி விதிக்கும் முடிவை அண்மையில் அரசு அறிவித்தது. இதற்கு பலத்த கண்டனமும் எதிர்ப்பும் பல்வேறு தரப்பில் இருந்தும் எழுந்தது.

**"கோமாரி நோயால் இறந்தது 1,124 கால்நடைகள் மட்டுமே'**

**சென்னை,**

கோமாரி நோய்க்கு தமிழகம் முழுவதும் 1,124 கால்நடைகள் மட்டுமே உயிரிழந்ததாக கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் திங்கள்கிழமை தொடங்கிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பேசிய தேமுதிக உறுப்பினர் ஆர். அருள்செல்வன் (மயிலாடுதுறை), கோமாரி நோய்க்கு தமிழகம் முழுவதும் ஆயிரக்கணக்கான கால்நடைகள் பலியாகியுள்ளன. பலியான கால்நடைகள் அனைத்துக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என்றார்.

அவருக்கு பதிலளித்து அமைச்சர் சின்னையா பேசியது:

தமிழகத்தில் கடந்த அக்டோபர் மாதம் கால்நடைகளுக்கு ஏற்பட்ட கோமாரி நோய் டிசம்பர் மாதம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இதற்காக 250 சிறப்பு மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டன. தமிழகம் முழுவதும் கோமாரி நோயால் 1,124 கால்நடைகள் மட்டுமே பலியாகியுள்ளன என்றார்.

**21-ல் விவசாயிகள் குறைதீர்வுக் கூட்டம்**

**காஞ்சிபுரம்,**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் பிப்ரவரி 21-ஆம் தேதி வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆட்சியர் கா. பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வரும் பிப்ரவரி 21-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள ஊராட்சி முகமை கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெற

உள்ளது.இக்கூட்டத்தில், விவசாயிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு, முக்கிய வேளாண்மைத் துறை சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கைகளை மனுவாக அளிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிலத்தடி நீர் பிரச்னை: பெரிய கண்மாய்களை ஆழப்படுத்த உயர் நீதிமன்றம் யோசனை

**மதுரை,**

நிலத்தடி நீரைப் பாதுகாக்க தமிழகத்தில் நாலாபுறமும் உள்ள முக்கிய 5 கண்மாய்களை ஆழப்படுத்தி ஸ்திரப்படுத்தும் வழிவகை குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

தமிழக நீர்நிலைகளை ஆழப்படுத்தக் கோரி லட்சுமணன் என்பவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி ஆகியோர் அடங்கிய அமர்வு இவ்வாறு உத்தரவிட்டது. திங்கள்கிழமை இவ் வழக்கு விசாரணைக்கு வந்த போது, தமிழக நீர்நிலைகளை ஆழப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இதற்கு அரசுத் தரப்பில், 2007- நீர் நிலை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமிழகத்தில் கண்மாய்கள் தூர்வாரப்பட்டு வருகின்றன. மொத்தம் 13,699 கண்மாய்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் 5 ஆயிரம் கண்மாய்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாரியிருக்கிறோம். மீதமுள்ள நீர்நிலைகளையும் தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையில்தான் கண்மாய்களைத் தூர்வார முடியும். குறுகிய கால இடைவெளியில் அதிக மழை பெய்துவிடுவதால் வேலைகள் முடிய நீண்ட காலம் தேவைப்படுகிறது. மிகப்பெரிய கண்மாய்களை தூர்வாருவதற்கு குறைந்தது 3 வருடங்கள் கால அவகாசம் தேவைப்படும். மண்ணை அகற்றி வேறு இடத்தில் கொட்டுவதிலும் சிக்கல் உள்ளது. வைகை, அமராவதி அணைகளைத் தூர்வாருவது தொடர்பாக மண் மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. நிலதக்தடி நீரைப்

பாதுகாக்க காட்டாற்று நீர் பாயும் ஓடைகளில் தடுப்பணைகள் கட்டவும் அரசு உத்தேசித்து உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: தமிழகத்தில் தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு என நான்கு புறமும் உள்ள பெரிய கண்மாய்களைத் தேர்வு செய்து அரசு ஆழப்படுத்தி அதிக நீரைச் சேமிக்கத் திட்டமிடலாம். இதற்கான சாத்தியம் குறித்து வரும் பிப்.24-ம் தேதிக்குள் பொதுப்பணித் துறை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

**பால் கறக்கும் இயந்திரங்கள் இலவசமாக வழங்கல்**

**மொடக்குறிச்சி,**

சிவகிரி அருகே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிக பால் வழங்கிய உறுப்பினர்களுக்கு, பால் கறக்கும் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. சிவகிரி அருகே கரட்டாங்காட்டுபுதூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவுக்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே.பி.துரைசாமி தலைமை வகித்தார். செயலாளர் சத்யநாராயணன் வரவேற்றுப் பேசினார். சங்கத்துக்கு அதிகப் பால் வழங்கிய உறுப்பினர்களைத் தேர்வு செய்து அவர்களை ஊக்குவிக்க, ஈரோடு ஆவின் ஒன்றியம் மூலமாக இலவசமாக தலா ரூ.40 ஆயிரம் மதிப்புள்ள நவீன பால் கறக்கும் இயந்திரங்களை சங்கத் தலைவர் துரைசாமி வழங்கினார் . துணைத் தலைவர் எஸ்.பழனிசாமி, சங்க இயக்குநர்கள் சாமியப்பன், எஸ்.நிர்மலாதேவி, கே.தங்கமணி உள்ளிட்ட உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர். இயக்குநர் சதாசிவம் நன்றி கூறினார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 43.07 அடி**

**ஈரோடு,** பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 43.07 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 327 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 250 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில்

பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.98 டி.எம்.சி.

**ரூ.8 லட்சத்துக்கு வாழைத்தார், தேங்காய் ஏலம்**

**கோபி,**

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.8 லட்சத்துக்கு வாழைத்தார் மற்றும் தேங்காய் ஏலம்போனது.

சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்திற்கு கோபி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், வாழைத்தார்களை கொண்டு வந்திருந்தனர்.

வாழைத்தார் ஏல விவரம்: கதலி ரக வாழைத்தார் கிலோ ரூ.28, நேந்திரன் கிலோ ரூ.20-க்கும் விற்பனையானது. செவ்வாழைத் தார் ரூ.670க்கும், ரொபஸ்டா ரூ.530-க்கும், தேன்வாழை ரூ.480-க்கும், ரஸ்தாளி ரூ.350-க்கும், மொந்தன் ரூ.300-க்கும், பூவன் ரூ.325-க்கும், பச்சைநாடன் ரூ.270-க்கும் ஏலம் போயின.

மொத்தம் 5,600 வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டிருந்தன. இதன் ஏல மதிப்பு ரூ.7 லட்சம். வாழைத்தார்களை திருப்பூர், பெருந்துறை, ஊத்துக்குளி பகுதி வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.

தேங்காய் ஏல விவரம்: தேங்காய் ஏலத்திற்கு விவசாயிகள் 11 ஆயிரம் தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில், தேங்காய் ஒன்று குறைந்தபட்சமாக ரூ.5-க்கும், அதிகபட்சமாக ரூ.16-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.1 லட்சத்து 20 ஆயிரத்திற்கு தேங்காய் ஏலம் போனது.

வரத்து குறைவாக இருந்ததால், கடந்த வாரத்தைவிட இந்த வாரம் தேங்காய் ஒன்று ரூ.2 விலை உயர்ந்து ஏலம்போனது.

**மோர்தானா அணை நீர் திறப்பு**

**குடியாத்தம்,**

குடியாத்தம் அருகே உள்ள மோர்தானா அணை திங்கள்கிழமை திறந்து வைக்கப்பட்டது.மாவட்ட ஆட்சியர் இரா. நந்தகோபால் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்து விட்டு, அதை மலர்தூவி வரவேற்றார். அணையிலிருந்து விநாடிக்கு 175 கனஅடி வீதம் நீர் வெளியேற்றப்படுகிறது.

மோர்தானா அணையின் மொத்தக் கொள்ளளவு  261.36 மில்லியன் கனஅடி. தற்போது அணையில் 90.920 மில்லியன் கனஅடி நீர் தேங்கியிருந்தது.

அணையில் குறைந்த அளவே தண்ணீர் உள்ளதால், நீர் இருப்பைக் கொண்டு அணையின், நேரடி பாசன நிலங்களுக்கோ, இடது மற்றும் வலதுபுறக் கால்வாய்கள் மூலம் பயன்பெறும் ஏரிகளுக்கோ தண்ணீர் திறந்து விடும் வாய்ப்பில்லை என்பதால் கௌன்டன்யா ஆற்றில் மட்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அணையில் பயன்படுத்த இயலாத தண்ணீர் இருப்பு 31.225 மில்லியன் கனஅடி போக, மீதமுள்ள 59.695 மில்லியன் கனஅடி நீர், திங்கள்கிழமையிலிருந்து வரும் 21-ஆம் தேதி வரை 4 நாள்களுக்கு ஆற்றில் திறந்து விடப்படுகிறது.

இதன் மூலம் குடியாத்தம் நகரம் மற்றும் மோர்தானா, கொட்டாரமடுகு, ஜிட்டபல்லி, சேம்பள்ளி, ஜங்காலபல்லி, உப்பரப்பல்லி, தட்டப்பாறை, ஆண்டிகான்பட்டி, ரங்கசமுத்திரம், ரேணுகாபுரம், அக்ராவரம், பெரும்பாடி, கொல்லைமேடு, மீனூர், மூங்கப்பட்டு, மேட்டுக்களம், சீவூர், போடிப்பேட்டை, தாழையாத்தம் ஆகிய கிராமங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகள், விவசாய கிணறுகளின் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது என பொதுப்பணித் துறையினர் தெரிவிக்கின்றனர்.

நிகழ்ச்சியில் வேலூர் கோட்டாட்சியர் பட்டாபிராமன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் லட்சுமி சுகுமாரன் (குடியாத்தம்), பொகளூர் டி. பிரபாகரன்(பேர்ணாம்பட்டு), நகர்மன்றத் தலைவர் அமுதா சிவப்பிரகாசம்,

வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத் தலைவர் ஜே.கே.என். பழனி, வட்டாட்சியர் கமலக்கண்ணன், பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் எம். கேசவலு, உதவி செயற் பொறியாளர் ஜி. முரளிதரன், உதவிப் பொறியாளர் பி. கோபி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் வி. ராமு (கொண்டசமுத்திரம்), எம். மோகன்(செருவங்கி), வி. சாமி(மோர்தானா), கே. சாமிநாதன் (மூங்கப்பட்டு) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ரூ. 4 கோடியில் அணை சீரமைக்கும் பணி

அணை சீரமைக்கும் திட்டத்தின்கீழ், மோர்தானா அணையை ரூ. 4 கோடியில் சீரமைக்கும் பணி தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம், அணையின் சுரங்கக் கால்வாய் புனரமைக்கப்படும்.

அணை வளாகத்தில் கருங்கல் கட்டடங்கள் கட்டப்படும். அணைக்கு கிழக்கே, கௌன்டன்யா ஆற்றின் குறுக்கே 2 சிறு பாலங்கள் கட்டப்படும் என பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர். இப்பணிகள் நிறைவடைய ஓராண்டு ஆகும் எனத் தெரிகிறது.

## 4 வட்டங்களில் அரசு அனுமதியின்றி ஆழ்துளை கிணறுகள் அமைக்கத் தடை

**வேலூர்,**

வேலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்யும் மழையால் கிடைக்கும் நீராதாரத்தைக் காட்டிலும் அதிகமான அளவு நீரை 4 வட்டங்களில் பயன்படுத்துவது ஆய்வில் தெரியவந்துள்ளதை அடுத்து அந்த வட்டங்களில் அரசு அனுமதியின்றி புதிதாக ஆழ்த்துளை கிணறுகள் போட தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மத்திய நீர்வள வாரியத்தின் விஞ்ஞானி சுப்பிரமணியன் தெரிவித்தார்.

வேலூர் ஆட்சியர் அலுவலகத்தில், பாலாற்று நிலத்தடி நீர் செறிவூட்டுதல் குறித்த கலந்தாய்வு கூட்டத்தில் இவர் கூறியது:

நடப்பு 5 ஆண்டு திட்டத்தில் நிலத்தடி நீராதாரம் உள்ள இடங்களை கண்டறியும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் கடலூரில்

இத்தகைய ஆய்வு ஹெலிகாப்டர் மூலம் நடத்தப்பட்டது. இந்த ஆய்வு வேலூர் மாவட்டத்தில் வரும் 2016-17-ம் ஆண்டுகளில் நடத்தப்படும்.

மாவட்டத்தில் நிலத்தடி நீராதாரத்தை அதிகமாக பயன்படுத்தும் வட்டங்களாக குடியாத்தம், ஜோலார்பேட்டை, பேர்ணாம்பட்டு, திருப்பத்தூர் ஆகியன கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் அரசு அனுமதியின்றி ஆழ்த்துளைகள் கிணறு அமைக்கக் கூடாது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றார்.

ஆணைய அதிகாரி

முன்னதாக  மத்திய நீர்வள ஆணையத்தின் கண்காணிப்புப் பொறியாளர் தங்கமணி பேசுகையில், ஆணையத்தின் நிதியுதவியுடன் தமிழகம் நீர்ப் பாசன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 7 திட்டங்களையும், வெள்ளத்தடுப்பு மேம்பாட்டு திட்டத்தில் 5 திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. நீர்நிலைகள் மேம்பாட்டு திட்டத்தில் 49 ஏரிகளை மேம்படுத்துவதற்கான கருத்துரு ஆணையத்துக்கு வந்துள்ளன. அவற்றில் 25 ஏரிகள் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவை என்றார்.

மாவட்டத்தில் வாணியம்பாடி, பேர்ணாம்பட்டு, ஆம்பூர், மேல்விஷாரம், ஆற்காடு, வாலாஜா, ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திட ரூ.600 கோடி மதிப்பிலான திட்ட முன்மொழிவு மத்திய அரசின் நிதியுதவிக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று நகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

வேலூர் மாவட்டத்தின் நீராதார மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.500 கோடிக்கு மற்றொரு திட்ட முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. ஏரிகளில் மழைக் காலத்தில் நீரைத் தேக்கி, அவற்றின் மதகை திறக்காமல், கிணற்று நீர் பாசனம் செய்வதன் மூலம் நீர் மேலாண்மையை செய்ய முடியுமா என்று பரிட்சார்த்த ஆய்வு ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது என்று பொதுப்பணித்துறை அதிகாரி கேசவலு தெரிவித்தார்.

மாவட்டத்தில் 85 கி.மீட்டர் நீளமுள்ள பாலாற்று படுகையில் 44 கி.மீட்டர் நீளத்துக்கு நிலத்தடி நீராதாரம் தோல் கழிவுநீர் மற்றும் ரசாயன கழிவுகளால்

மாசுபட்டுள்ளது ஆய்வில் தெரிய வந்துள்ளதாக நிலத்தடி நீராதார தகவல் துறையைச் சேர்ந்த அலுவலர் தெரிவித்தார்.விஐடி சார்பில் முள்புதர்களை அகற்ற தயார் வேலூர் மாநகரில் சேண்பாக்கம் முதல் பெருமுகை வரையிலான 12 கி.மீட்டர் நீளத்துக்கு பாலாற்றில் உள்ள செடி,கொடி ஆக்கிரமிப்புகளை அகற்றித் தர விஐடி நிர்வாகம் தயாராக இருப்பதாக அதன் சார்பில் பங்கேற்ற திட்ட அலுவலர் தமிழ்மாறன் தெரிவித்தார். அப்பணியை உடனடியாக தொடங்குமாறு ஆட்சியர் நந்தகோபால் கேட்டுக் கொண்டார்.

ஆட்சியர் தகவல்

வேலூர் மாநகராட்சி எல்லைக்குள் பாலாற்றின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அதையொட்டி சாலை அமைக்கும் திட்டப் பணிக்கான முன்மொழிவை வேலூர் மாநகராட்சி நிர்வாகம் அரசுக்கு அனுப்பியுள்ளது. இதன் மூலம் பாலாற்று ஆக்கிரமிப்பைத் தடுப்பதோடு, மழைக் காலத்தில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க முடியும். நகருக்குள் ஏற்படும் போக்குவரத்து நெரிசலையும் தடுக்க முடியும். இத்தகைய முயற்சி ஏற்கெனவே மதுரையில் வெற்றி பெற்றுள்ளது என்றார் ஆட்சியர் இரா.நந்தகோபால்.

**கோடை பருவ பயிர் சாகுபடி சிறப்பு முகாம்**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலையை அடுத்த ஆடையூர் கிராமத்தில் கோடை பருவ பயிர் சாகுபடி குறித்த சிறப்புப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

முகாமுக்கு, ஊராட்சித் தலைவர் ராமமூர்த்தி தலைமை வகித்தார். திருவண்ணாமலை வேளாண்மை உதவி இயக்குநர் இரா.பெரியசாமி கலந்து கொண்டு கோடைக்காலத்தில் குறைந்த நீர் தேவையுள்ள திருந்திய நெல் சாகுபடி, சிறுதானியங்களான கம்பு, ராகி, மக்காச்சோளம் மற்றும் பயறு வகைப் பயிர்களில் உளுந்து போன்ற பயிர்களை சாகுபடி செய்யத் தேவையான நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கிப் பேசினார். இம்முகாமில், வேளாண்மை

அலுவலர் எலிசபெத் ராணி, வேளாண் விரிவாக்க உதவியாளர் சிவலிங்கம், உதவி வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**ஆரணி பால் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ஊக்கத்தொகை**

**ஆரணி,**

ஆரணி பால் கூட்டுறவு சங்கத்தில் சங்க உறுப்பினர்கள் 985 பேருக்கு 2012-2013ம் ஆண்டுக்கான ஊக்கத்தொகை ரூ.7 லட்சத்து 2 ஆயிரம் திங்கள்கிழமை வழங்கப்பட்டது.

ஆரணி பால் கூட்டுறவு சங்கத்தில் 2012-2013ம் ஆண்டில் 985 பேர் பால் வழங்கியதில் ஒரு லிட்டர் பாலுக்கு 35 பைசா வீதம் ரூ.7 லட்சத்து 2 ஆயிரத்து 679 ஐ ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது.

இத்தொகையினை பால் கூட்டுறவு சங்கத்தலைவர் குமுதவள்ளி வழங்கினார்.

இதில் அதிமுக நகரச்செயலர் அசோக்குமார், சங்கத் துணைத்தலைவர் வி.ஜி.ஆர்.சதீஷ், உறுப்பினர்கள் குணசேகர், சக்திவேல், சைதை சுப்பிரமணி, பாஸ்கர், சேட்டு, பிரேமலதா, ஷோபா, கவிதா, செயலர் எம்.இ.சீனிவாசன், எழுத்தர் எஸ்.குமரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**தோட்டக்கலைத் துறை கருத்தரங்கு**

**தருமபுரி,**

தருமபுரியில் தோட்டக்கலைத் துறை சார்பில் கண்காட்சி, கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தருமபுரி மாவட்ட வேளாண்மை, தோட்டக்கலைத் துறை சார்பில், விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தி வரும் நலத் திட்ட உதவிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த, வேளாண் துறையில் உள்ள நவீன

கருவிகள் பயன்பாடு, உற்பத்தியைப் பெருக்கும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்க ஒரு வாரகால கண்காட்சி, கருத்தரங்கு நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடத்தில் நடைபெற்ற இந்தக் கண்காட்சி, கருத்தரங்கை கடந்த 10-ஆம் தேதி ஆட்சியர் கே.விவேகானந்தன் தொடக்கிவைத்தார்.

இதில், முதல் நாளில் மக்காச்சோளம் சாகுபடி குறித்து கருத்தரங்கு நடைபெற்றது. இரண்டாம் நாளில் வேளாண் விற்பனைத் துறை சார்பில் மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் பொருள்கள் உற்பத்தி, வேளாண் கருவிகள் பயன்பாடு, வேளாண் அறிவியல் மையம் சார்பில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு, கால்நடை மற்றும் பட்டு வளர்ச்சித் துறை சார்பில் கால்நடை வளர்ப்பு, பட்டு வளர்ச்சி கருத்தரங்கு, மாவட்டத் தொழில் மையம் சார்பில் விவசாய தொழில்முனைவோர் பயிற்சி ஆகியவை நடைபெற்றன. இதில், ஞாயிற்றுக்கிழமை தோட்டக்கலைத் துறை சார்பில் காய்கறிகள், மலர்கள் சாகுபடி குறித்து கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் பேசியது:

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை மதிப்புக் கூட்டுப் பொருள்களாக மாற்றிட வேண்டும். அவ்வாறு செய்யும் போது அதிக வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், தோட்டக்கலைத் துறை சார்பில் வழங்கப்படும் மானியத்துடன் கூடிய திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தோட்டக்கலைத் துறை சார்பில் வத்தல்மலையில் தாவரவியல் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

மேலும், இதில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை பொதுமக்கள் பார்வைக்காக வைத்திருந்தனர்.

இந்தக் கண்காட்சி, கருத்தங்கம் ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது.

இதில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்று, கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

**ராசிபுரம் கூட்டுறவுச் சங்கத்தில்ரூ.1.30 கோடி பருத்தி ஏலம்**

**ராசிபுரம்,**

ராசிபுரம் வேளாண்மைக் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.1.30 கோடி மதிப்பிலான பருத்தி மூட்டைகள் ஏலம் போயின.

ராசிபுரம் வேளாண்மைக் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) சார்பில், ராசிபுரம் அருகே உள்ள கவுண்டம்பாளையம் கிடங்கில் பருத்தி ஏலம் ரகசிய ஏல முறையில் நடைபெற்றது. இதில் 20-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தி மூட்டைகளை ஏலத்தில் எடுத்தனர்.இதில் சுற்று வட்டாரப் பகுதிகள் மட்டுமன்றி அண்டை மாவட்டங்களிலிருந்தும் விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்திருந்தனர். மொத்தம் 7,021 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தன.இதில், டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக ரூ.7,789-க்கும், குறைந்தபட்சமாக ரூ.6,569-க்கும், ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக ரூ.5, 750-க்கும், குறைந்தபட்சமாக ரூ.5,069-க்கும் ஏலம் போனது. ஒரே நாளில் ஒரு கோடியே 30 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது.ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம், கோவை, திண்டுக்கல் ஆகிய ஊர்களைச் சேர்ந்த 20-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தி மூட்டைகளை ஏலத்தில் எடுத்தனர்.

**கோழி வளர்க்க இலவசப் பயிற்சி**

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம் மூலம் கோழி வளர்ப்பு குறித்து இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கிராமப்புறங்களைச் சேர்ந்த படித்த, வேலையில்லாத இளைஞர்களுக்கு சுய  வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில் பல்வேறு

தொழிற்பயிற்சிகளை அளித்து வருகிறது. அதில், கோழி வளர்ப்பு குறித்த 6 நாள் இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 18 வயது முதல் 35 வயதிற்குள் உள்ள கிராமப்புற ஆண்கள் மற்றும் பெண்கள் மூன்று பாஸ்போர்ட் அளவு புகைப்பட நகல்களோடு மாற்றுச்சான்றிதழ், மதிப்பெண் பட்டியல், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை நகல்களையும் இணைத்து அவரவர் கைப்பேசி எண்ணையும் குறிப்பிட்டு வரும் 25.2.2014 -க்கு முன்னதாக நேரில் வந்து விண்ணப்பிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம், 1506-2 மேல நான்காம் வீதி (திலகர்திடல்) புதுக்கோட்டை. 622 001 என்ற முகவரியிலும், 04322- 225339 , 99947 37185 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

**பிப். 28-ல் நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**நாகப்பட்டினம்,**

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் வரும் 28-ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறும் என ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்துள்ளார்.

முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று தங்கள் கருத்துகளைத் தெரிவிக்குமாறு ஆட்சியர் து. முனுசாமி தனது செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**"மீனவ அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்'**

**தூத்துக்குடி,**

மீனவ அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் அழைப்பு விடுத்துள்ளார். தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக

வளாகத்தில் மீன்பிடி துறைமுக மேலாண்மை சங்கத்தினர் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மீனவர்களின் பிரச்னைகளை கேட்டறிந்த பின் ஆட்சியர் பேசியதாவது, மீன்பிடித் துறைமுகத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும். துறைமுகத்தில் தேவையான அடிப்படை வசதிகளை மாநகராட்சி உடனே செய்து தர வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தேவையான குடிநீரை அளிக்க முன்வர வேண்டும். மீனவர்களின் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து வசதிகளை செய்வதற்கு மீனவ சங்க உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். மேலாண்மை சங்கம் மேம்பாடு அடைய மீனவ அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட முன்வர வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மீன்வளத் துறை இணை இயக்குநர் அமல்சேவியர், மீன்பிடித் துறைமுக உதவி இயக்குநர் சேகர், துறைமுக பாதுகாப்பு அலுவலர் அமத்கபீர், உதவி செயற்பொறியாளர் கங்காதரன், ஆய்வாளர் விஜயராகவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு**

**திருநெல்வேலி,**

இம்மாதம்  21ஆம் தேதி நடைபெறவிருந்த திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் பிப்.28 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் கூறியது: மாதந்தோறும் 3 ஆவது வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுவது வழக்கம். நிர்வாகக் காரணங்களுக்காக பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ள குறைதீர் கூட்டம் வரும் 28 ஆம் தேதி காலை 11 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், நீர்ப் பாசன சங்கத்தினர் தவறாமல் பங்கேற்குமாறு ஆட்சியர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**"பதிவு செய்யாமல் இறால் பண்ணை நடத்தினால் ரூ.1 லட்சம் அபராதம்'**

**கடலூர்,**

கடலூர் மாவட்டத்தில் பதிவு செய்யாமல் இறால் பண்ணை வைத்திருப்போருக்கு ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் உள்ள உவர்நீர் இறால் பண்ணைகள் அனைத்தும், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு செய்து, பதிவுச் சான்றிதழ்களை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும். கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் தங்களது இறால் வளர்ப்பு பண்ணையை பதிவு செய்து கொள்ளவும், பதிவு செய்யப்பட்டு 5 ஆண்டுகள் முடிவடைந்த பதிவுச் சான்றிதழ்களை புதுப்பித்துக்கொள்ள உரிய விண்ணப்பங்கள் பரங்கிப்பேட்டை மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திலும் அல்லது கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய இணையதளம் மூலமாக ஜ்ஜ்ஜ்.ஞ்ஹஹ.ஞ்ர்ஸ்.ண்ய் என்ற இணையதள முகவரியில் இருந்தும் பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு செய்யாமல் இறால் வளர்ப்பு பண்ணைகள் அமைத்து செயல்படுத்துவோருக்கு கடலோர நீர்வாழ் உயிரின சட்டம் 2006-ன் படி, ரூ. ஒரு லட்சம் வரை அபராதம் அல்லது 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படும். மேலும், அரசு புறம்போக்கு நிலங்களில் சட்டத்துக்கு புறம்பாக இறால் பண்ணை வைத்திருந்தால் அவற்றை உடனடியாக அகற்றிவிடவேண்டும் என அதில் கேட்டுக்கொண்டுள்ளார்.

**மானிய விலையில் தர்பூசணி விதைகள்**

**கடலூர்,**

மானிய விலையில் வீரிய ரக தர்பூசணி விதைகளை விவசாயிகள் வாங்கி பயனடையலாம் என விருத்தாசலம் தோட்டக்கலைத் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தத் துறை உதவி இயக்குநர் மணிமொழி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தர்பூசணி சாகுபடியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென வீரிய ரக காஷ்மீரா தர்பூசணி விதைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

இந்த ரகத்தை பொறுத்தவரையில் தர்பூசணியை 70 முதல் 80 நாள்களில் அறுவடை செய்யலாம். அதோடு அறுவடை செய்யப்படும் தர்பூசணியானது 7 முதல் 9 கிலோ வரை எடை இருக்கும்.

இதற்கென விதைகளைப் பெற விரும்பும் விவசாயிகள் விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் இயங்கும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். இதேபோன்று சின்ன வெங்காயத்தில் கோ-5 ரக விதைகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இறைச்சிக் கூடங்களை நவீனப்படுத்த மானியம்**

**விழுப்புரம்,**

தேசிய உணவுப் பதப்படுத்துதல் இயக்கத்தின் கீழ் இறைச்சிக் கூடங்களை நவீனப்படுத்த வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

இது குறித்து வேளாண் வணிக துணை இயக்குநர் மா.சண்முகம் வெளியிட்ட அறிக்கை:

இறைச்சிக் கூடங்களை நவீனப்படுத்துவதற்கு தேவையான உள்கட்டமைப்பு மற்றும் கருவிகள் வாங்கி, ஒட்டுமொத்த சுகாதார அடிப்படையில் மேம்படுத்தி, நுகர்வோர்களுக்கு ஆரோக்கியமான இறைச்சி வழங்க வேண்டும்.

இந்த அடிப்படையில், பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், சுய உதவிக்குழுக்கள், தனியார்

நிறுவனங்கள், தனி நபர்களுக்கு தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம் மூலம் அரசு மானியம் வழங்கப்படுகிறது. நிதி உதவி கோரும் விண்ணப்பதாரர்கள் மாநில உணவுபதப்படுத்துதல் இயக்கத்துக்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை ஜ்ஜ்ஜ்.ம்ர்ச்ல்ண்.ய்ண்ஸ்ரீ.ண்ய் என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு வேளாண் வணிக துணை இயக்குநர், ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகம் முதல் மாடி, நேருஜி சாலை, விழுப்புரம்-605602 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வறட்சி குறித்து கணக்கெடுப்பு வேளாண் துறை திட்டம்**

தமிழகத்தில் நிலவி வரும் வறட்சி பாதிப்பு குறித்து கணக்கெடுப்பு நடத்த, வேளாண் துறை திட்டமிட்டு உள்ளது. இதுகுறித்து, வேளாண் துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: தமிழகத்தில், 2013ம் ஆண்டுக்கான வடகிழக்கு பருவமழை, எதிர்பார்த்த அளவு இல்லை. 2012ல் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால், சென்னையை தவிர்த்து மற்ற மாவட்டங்கள், வறட்சியால் பாதிக்கப்பட்டவை என, அறிவிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டது. இந்த ஆண்டும் வறட்சி தொடருவதால், விவசாயிகளின் நிலை மிகவும் மோசமாகி உள்ளது. நிலத்தடிநீர் மட்டமும் கவலைக்கிடமாகி வருகிறது. இதனால், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோவை, திருப்பூர், விருதுநகர் மாவட்டங்களில் வறட்சி பாதிப்பு குறித்த ரகசிய

கணக்கெடுப்பை, வேளாண் துறையினர் தொடங்க உள்ளனர். வறட்சி காரணமாக, தென் மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்கு அடுத்த தாளடி, நவரை, சொர்ணவாரி சாகுபடி நடக்க வாய்ப்பில்லை. எனவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பு மற்றும் விவசாய சூழல் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட உள்ளது. கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்க, கால்நடை துறை நடவடிக்கை எடுத்து உள்ளது. டெல்டா மாவட்டங்களில், சம்பா சாகுபடியில் கிடைத்த வைக்கோலை, மற்ற மாவட்டங்களுக்கு எடுத்து சென்று மானிய விலையில் வழங்க வேண்டும். மாநிலம் முழுவதும் உள்ள கால்நடைகளுக்கு தேவையான வைக்கோல், டெல்டா மாவட்டங்களில் இருப்பு உள்ளது. இந்த விஷயத்தில், அரசு தான் முடிவு எடுக்க எடுக்கவேண்டும்.இவ்வாறு,அவர்கூறினார்.

**சென்னை, காஞ்சிபுரத்தில் மிதமான மழை : வறண்ட பூமி நனைந்தது**

சென்னை: காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக, சென்னை, காஞ்சிபுரம், வேலூர் மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்துள்ளது. கடும் குளிர் : வடகிழக்கு பருவமழை முடிந்த நிலையில், ஜனவரி முதலே, தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடும் குளிர் நிலவி வருகிறது. நள்ளிரவு முதல், காலை, 8:00 மணி வரை, சாலைகளில், பனிமூட்டம் காணப்படுகிறது. நேற்று முன்தினம் காலை திடீரென சென்னை, உள்ளிட்ட வட தமிழகத்தின் சில பகுதிகளில்,மேகம் இருண்டு, மழை வரும் சூழல் நிலவியது. "வங்கக்கடலில் நிலவி வரும் காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் காற்று தொடர்ந்து வீசாததன் காரணமாக, தமிழகம், ஆந்திரா, லட்சத்தீவுகள் மற்றும் கேரளாவில் சில பகுதிகளில், ஆங்காங்கே மழை பெய்யும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. வானிலை மையத்தின் தகவலில் குறிப்பிட்டது போல், நேற்று முன்தினம் இரவு முதல், சென்னை உட்பட வட தமிழகத்தின் குறிப்பிட்ட சில

பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை வரை பதிவாகியுள்ளது. கடந்த, 24 மணி நேரத்தில், காஞ்சிபுரம் - கேளம்பாக்கம், 3, வேலூர் - ஆலங்காயம், 2, சென்னை - நுங்கம்பாக்கம், வேலூர் - திருப்பத்தூர், 1 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

மழை நீடிக்கும் : நேற்று காலை, நுங்கம்பாக்கம், ஷெனாய் நகர், வள்ளுவர் கோட்டம் பகுதிகளில் ஒரு மணி நேரம், மழை கொட்டித் தீர்த்தது. புறநகர் பகுதிகளிலும்,மழைவிட்டுவிட்டுபெய்தது.

கடந்த ஒன்றரை மாதமாக காய்ந்து கிடந்த வடதமிழகத்தின் சில பகுதிகள், லேசாக நனைந்தன. இந்நிலையில், "இன்னும், 48 மணிநேரத்திற்கு மழை நீடிக்கும்; அதன் பின், படிப்படியாக குறையும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னையை பொறுத்தவரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என, கூறப்பட்டுள்ளது.

பல இடங்களில் மின் தடை : நேற்று, பெய்த திடீர் மழையால், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை உள்ளடக்கிய, பல இடங்களில், மின் தடை செய்யப்பட்டது. தமிழகத்தில், 2.43 கோடி மின் நுகர்வோர் உள்ளனர். இதில், சென்னை மற்றும் புறநகரில், 20 லட்சம் பேர் உள்ளனர். சென்னைக்கு, தினசரி, சராசரியாக, 3,500 மெகா வாட் தேவை. நேற்று, பெய்த திடீர் மழையால், சைதாப்பேட்டை, வேளச்சேரி, பாலவாக்கம், அடையாறு, திருவான்மியூர், தரமணி, மயிலாப்பூர் உள்ளிட்ட இடங்களில், டிரான்ஸ்பார்மரில் இருந்த, "பியூஸ்' பழுதானது. இதையடுத்து, பழுதை சரிசெய்ய, மேற்கண்ட இடங்களில், அதிகாலை, முதல் மின் தடை செய்யப்பட்டது. மதியத்திற்கு மேல், பழுது சரி செய்யப்பட்டு, சீராக மின்சாரம் வினியோகம் செய்யப்பட்டது.

**வறட்சியை சமாளிக்கும் உலர் தீவன கிடங்கு : 10 நாளில் 40,000 கிலோ வைக்கோல் விற்பனை**

ஈரோடு: ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில், தீவன பற்றாக்குறையை சமாளிக்க, 39, 755 கிலோ கொள்முதல் செய்து, 441 பயனாளிக்கு, 39 , 714 கிலோ வைக்கோல் வழங்கப்பட்டுள்ளது.

வறட்சி காலத்தில், தீவன பற்றாக்குறையால் ஏற்படும் பால் உற்பத்தி இழப்பை ஈடுகட்டவும், கால்நடை வளர்க்கும், சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்கவும், கால்நடை வளர்க்கும் தொழிலை, விவசாயிகள் வறட்சி காலத்திலும், லாபகரமாக நடத்திட, ஈரோடு மாவட்டத்தில் உலர் தீவன கிடங்கு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை, எழுமாத்தூர், பவானி, பொலவக்காளிபாளையம் மற்றும் நம்பியூர் ஆகிய, ஐந்து இடங்களில், கால்நடைமருத்துவமனைகளில்,இத்திட்டம்துவங்கப்பட்டுள்ளது.

இம்மையங்களில், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, ஒரு கிலோ வைக்கோல், 2 ரூபாய் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இம்மையங்களில் வைக்கோல் தேவையை பூர்த்தி செய்ய, வைக்கோல் உபரியாக உள்ள விவசாயிகளிடம் மற்றும் வியாபாரிகளிடம் இருந்து, போட்டி விலைப்பட்டியல் பெற்று, வைக்கோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்துக்கு, கொள்முதல் செய்யப்படும் வைக்கோல் ஈரமில்லாமல், நன்கு உலர்ந்ததாக, ஈரப்பதம், 10 சதவீதத்துக்கு மிகாமல் பெறப்பட்டு வருகிறது. பெறப்பட்ட வைக்கோல், விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது.

அதன்படி, ஃபிப்., 1 முதல், 10ம் தேதி வரை, பெருந்துறை கிடங்கில், 8,145 கிலோ பெறப்பட்டு, 78 பயனாளிகளுக்கு, 8,127 கிலோ வைக்கோல் வழங்கப்பட்டுள்ளது. எழுமாத்தூரில், 6,240 கிலோ, 63 பயனாளிக்கும், நம்பியூரில், 9,960 கிலோ பெற்று, 105 பயனாளிக்கு, 9,954 கிலோ வழங்கப்பட்டுள்ளது.

பொலவக்காளிபாளையம் கிடங்கில், 9,360 கிலோ பெற்றதில், 118 பயனாளிக்கு,

9,345 கிலோ வழங்கப்பட்டுள்ளது. பவானியில், 6,050 கிலோ பெற்றதில், 77 பயனாளிக்கு, 6,048 கிலோ வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில், ஐந்து கிடங்கில், 39 ஆயிரத்து, 755 கிலோ கொள்முதல் செய்ததில், 441 பயனாளிகளுக்கு, 39 ஆயிரத்து, 714 கிலோ வழங்கப்பட்டுள்ளது. கால்நடை தீவன தேவை அதிகரிப்பால், தீவனம் வந்ததும், உடனடியாக விற்று தீர்கிறது.

**சொட்டு நீர்பாசனத்தில் விவசாயிகள் ஆர்வம் : கரும்பு பயிரை காப்பாற்ற நடவடிக்கை**

தியாகதுருகம் : பருவமழை 2 ஆண்டுகளாக பொய்த்து நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால் கரும்பு பயிரை காப்பாற்ற சொட்டுநீர் பாசன முறையை செயல்படுத்த விவசாயிகள் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். பருவமழை கடந்த 2 ஆண்டுகளாக ஏமாற்றியதால் நீர்நிலைகள் வறண்டு, நிலத்தடி நீர் மட்டம் "கிடுகிடு' வென குறைந்து வருகிறது. இது கிணற்று நீர்பாசனத்தை நம்பி பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஆண்டுப் பயிரான கரும்பு சாகுபடி செய்ய, தொடர்ந்து தண்ணீர் தேவைப்படுகிறது. கிடைக்கும் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது. பரப்பு அதிகரிப்பு கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்னசேலம், தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதிகளில் கரும்பு சாகுபடி பரப்பு 3 ஆண்டுகளில் பல மடங்கு அதிகரித்துள்ளது. பருவ மழை பொய்த்ததால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலையில், கோடையில் போதிய நீர் பாய்ச்சினால் மட்டுமே பயிரை கருகாமல் காப்பாற்ற முடியும். இத்துடன் மின்வெட்டு பிரச்னையும் ஏற்பட்டால் கரும்புக்கு நீர்பாய்ச்சுவதில் சிக்கல் ஏற்படும். இதற்கு முன்னெச்சரிக்கையாக பயிர்களை பாதுகாக்க சொட்டு நீர் பாசன முறையை செயல்படுத்த இப்பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் கோடைகாலத்தில் நீர் பற்றாக்குறை ஏற்பட்டு இப்பகுதியில் 25 ஆயிரம் ஏக்கர் கரும்பு கருகியது. தீவைப்பு அவற்றை அகற்ற முடியாமல் சிலர் கருகிய கரும்பை தீயிட்டு கொளுத் திய அவலமும் நடந்தது. இந்த பிரச்னை இனியும் தொடராமல் இருக்க விவசாயிகள்

சொட்டு நீர் பாசன முறைக்கு மாறி வருகின்றனர். அரசு வழங்கும் சலுகையை பயன்படுத்தி தங்கள் வயல்களில் இச்சாதனத்தை பொருத்த பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சொட்டுநீர் பாசன சாதனத்தை அமைக்க விரும்புவோருக்கு தோட்டக் கலைத் துறை மானியம் வழங்குகிறது. குறு விவசாயிகளுக்கு முழு மானியத் தொகையான ஒரு ஏக்கருக்கு 43 ஆயிரத்து 816 ரூபாயும், பெரு விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்குகிறது. வேளாண்மை துறை பரிந்துரையில் பல விவசாயிகள் பலனடைந்து வருகின்றனர்.

பருவசீவல் முறை

இம்முறையால் 60 சதவீதம் தண்ணீரை சேமிக்க முடியும். வறட்சியான காலங்களில் சாகுபடி செய்த பயிரை கருகாமல் காப்பாற்ற சொட்டுநீர் பாசன முறை கைகொடுக்கிறது. தற்போது பருசீவல் முறையில் உற்பத்தி செய்யும் கரும்பு நாற்றுக்களை பயன்படுத்தி நடவு செய்வது விவசாயிகளிடம் பிரபலமாகி வருகிறது.

இதனால் கரும்பு பருத்து வளரும் வரை சீரான தண்ணீர் தேவைப்படுகிறது. இச்சூழலில் தண்ணீர் பற்றாக் குறையால் நாற்றுக்கள் கருகும் அபாயம் உள்ளதால் இப்பிரச்னைக்கு சொட்டுநீர் பாசன முறை நல்ல தீர்வாக அமைந்துள்ளது. பருவமழை பொய்த்துள்ள நிலையில் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனமுறை வரப்பிரசாதமாக இருப்பதால் பலரும் இதை அமைப்பதில் ஆர்வம் காட்டி வருகின் றனர்.

ஊக்குவிப்பு அவசியம்

கள்ளக்குறிச்சி பகுதியில் கரும்பு சாகுபடி செய்துள்ள மொத்த பரப்பை கணக்கிடும் போது சொட்டு நீர் பாசனத்தை 5 சதவீதம் விவசாயிகள் கூட தங்கள் வயலில் அமைக்கவில்லை. கடந்த ஆண்டுகளில் நீர் பற்றாக்குறையால் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக தற்போது விவசாயிகளே முன்வந்து இச்சாதனத்தை பொருத்துகின்றனர். இவர்களை வேளாண்துறையினர் ஊக்கப்படுத்தி அரசு சலுகையை பெற்று தந்தால் பலர் இதன் மூலம் பயனடைவார்கள்.

**கொள்முதல் நிலையங்களில் நெல் வரத்து குறைவு : வெளி மார்க்கெட்டில் கூடுதல் விலை காரணமா?**

கடலூர் : காவிரி டெல்டா பகுதியில் கடந்த சம்பா பருவத்தில் விவசாயிகள் சன்ன ரகமான பி.பி.டி., நெல் நடவு செய்ததால் கொள்முதல் நிலையங்களில் வரத்து குறைந்துள்ளது.
கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் ஆகிய 2 தாலுகாக்கள் டெல்டா பகுதியாக உள்ளன. கடந்த சம்பா போகத்திற்கு போதியளவு காவிரி தண்ணீர் பாசனத்திற்கு கிடைத்ததாலும், நேரடி நெல் விதைப்பில் விவசாயிகள் ஈடுபட்டதாலும் முன்கூட்டியே அறுவடைக்கு தயாராகினர். கடந்த ஆண்டு சன்ன ரகம் (சாப்பாட்டு அரிசி) நல்ல விலை போனதால் 70 சதவீத விவசாயிகள் பி.பி.டி., நெல்லை நடவு செய்தனர். இதனால் மோட்டா ரகம் நடவு குறைந்தது. இந்த ஆண்டு அரசு புதிய விலையாக சன்ன ரகத்திற்கு கிலோ ஒன்றுக்கு 14.15 ரூபாயாக நிர்ணயம் செய்தது. தண்ணீர் பற்றாக்குறை இல்லாததால் கொள்முதல் நிலையங்களுக்கு கூடுதல் வரத்து இருக்கும் என எதிர்பார்த்து 2 கட்டமாக 117 கொள்முதல் நிலையங்களை துவங்கப்பட்டது. இது கடந்த ஆண்டு துவங்கப்பட்டதைவிட 30 கொள்முதல் நிலையங்கள் குறைவாகும். அவ்வாறு குறைவான கொள்முதல் நிலையங்கள் துவக்கப்பட்டும் கூட நெல் வரத்து அதிகம் இல்லை. காரணம், இந்த தொகையை விட வெளிமார்க்கெட்டில் கிலோ ஒன்றுக்கு 16 ரூபாய் முதல் 17 ரூபாய் வரை, விவசாயிகள் நிலத்திற்கே சென்று முன் பணம் கொடுத்து வாங்கிச் செல்கின்றனர்.ஒரு சில விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் நல்ல விலைக்கு விற்பனை செய்கின்றனர்.
நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஈரப்பதம், பதர் நீக்கிய நெல், அடங்கல், சிட்டா உட்பட ஏராளமான சான்றிதழ்கள் கொடுக்க வேண்டி இருப்பதால் விவசாயிகள் வெளி மார்க்கெட் வியாபாரிகளை நாடும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிகாரிகள் அலட்சியம் காரணமாக வியாபாரிகளை கட்டுப்படுத்தத் தவறி விட்டனர். 40 கிலோ கொள்ளளவு உள்ள சாக்கு பற்றாக்குறையும் இதற்கு முக்கிய காரணம்.
இதனால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நெல் மூட்டைகள் குவியும் நிலையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் வரத்து குறைந்துள்ளது.இந்த ஆண்டு 1.2லட்சம் டன் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயத்த போதிலும் இதுவரை 17 ஆயிரம் டன் மட்டுமே கொள்முதல்

செய்யப்பட்டுள்ளது.இந்நிலையில் வெலிங்டன் பாசனத்தில் ஏப்ரலில் அறுவடையாகும் நெல்லை குறி வைத்து அதிகாரிகள் காத்திருக்கின்றனர்.

**தர்பூசணி விலை கிடு கிடு உயர்வு**

சேலம்: தமிழகத்தில், கோடை காலம் துவங்கவுள்ள நிலையில், தர்பூசணி விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது.திண்டிவனம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, ஊத்தங்கரை, அரூர் போன்ற பகுதிளில் இருந்து, தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்கு, தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. தற்போது, இந்த பகுதியில், போதிய பருவ மழை பெய்யாததால், விளைச்சல் குறைந்துள்ளது.கடந்த ஆண்டு, ஒரு டன் தர்பூசணி பழம், 6,000 முதல், 7,000 வரை ரூபாய்க்கும், ஒரு கிலோ தர்பூசணி, 10 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு அதிக விளைச்சல் இல்லாததால், தர்பூசணி, ஒரு டன், 10 ஆயிரம் ரூபாயாகி உள்ளது. தற்போது, ஒரு கிலோ தர்பூசணி பழம், 15 ரூபாய் க்கு விற்கப்படுகிறது

**ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ.10 லட்சம் வர்த்தகம்**

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 300 மூட்டை மஞ்சள், 10 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு, 50 விவசாயிகள், தங்கள் விளைவித்த, 300 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.இதில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 5,689 ரூபாய், அதிகபட்சம், 8,000 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 5,289 ரூபாய், அதிகபட்சம், 7,069 ரூபாய், பனங்காலி மஞ்சள்

குவிண்டால் குறைந்தபட்சம், 9,000 ரூபாய், அதிகபட்சம், 13 ஆயிரத்து, 749 ரூபாய் என விற்பனையானது.ஏலத்தில், 10 வியாபாரிகள் கலந்து கொண்டு, 300 மூட்டை மஞ்சளை, 10 லட்சம் ரூபாய்க்கு வாங்கிச் சென்றனர்.

**"ஹைபிரிட்' மாதுளை அறுவடைகொளத்தூர் விவசாயிகள் சாதனை**

மேட்டூர்: கொளத்தூர் பகுதியில் மாதுளை சாகுபடி செய்த விவசாயிகள், இரண்டரை ஆண்டு உழைப்புக்கு பின், அறுவடை துவக்கியுள்ளனர்.மேட்டூர் தாலுகாவில் உள்ள கொளத்தூர் ஒன்றியம் வறட்சியான பகுதி. இப்பகுதி விவசாயிகள் கிணறு, போர்வெல் நீர் பாசனத்தை நம்பியே பயிர் சாகுபடி செய்கின்றனர். நெல், மஞ்சள், மிளகாய், வாழை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்த போதிலும், எதிர்பார்த்த வருவாய் ஈட்ட முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டனர்.விவசாயத்தை லாபகரமக செய்ய வேண்டும், என கருதிய கொளத்தூர் அடுத்த கும்பாரப்பட்டி, தொட்டிகிணறு சுற்றுப்பகுதி விவசாயிகள், 10 பேர் மஹாராஷ்டிரா, கர்நாடகா மாநிலத்தில், சுற்றுப்பயணம் செய்து, ஹைபிரிட் மாதுளை சாகுபடி நிலங்களை பார்வையிட்டனர். பின்பு அங்கிருந்து பாகுவா ரக மாதுளை செடிகளை கொள்முதல் செய்து, நிலங்களில் சாகுபடி செய்தனர்.இரு ஆண்டு அயராத உழைப்புக்கு பின், கடந்த ஆண்டு இறுதியில் செடிகளில் பூக்கள் உற்பத்தியானது. பின்பு காய்க்க துவங்கிய செடிகளில், தற்போது மாதுளை பழங்களை அறுவடை செய்து வருகின்றனர்.தொட்டி கிணறு விவசாயி சாமித்துரை கூறியதாவது:நான்கு ஏக்கரில், இரண்டரை ஆண்டுக்கு முன், சாகுபடி செய்த செடிகளில், முதன்முறையாக மாதுளை பழங்கள் அறுவடை செய்கிறோம். கொளத்தூரி இருந்து ஈரோடு, கரூருக்கு பழங்களை தரம் வாரியாக பிரித்து அனுப்புகிறோம்.வியாபாரிகள், 100 கிராமுக்கு குறைவான பழங்களை கிலோ, 60 ரூபாய்க்கும், 120 முதல், 150 கிராம் எடை பழங்களை, 70 ரூபாய்க்கும், 150 முதல்,

200 கிராம் எடை பழங்களை கிலோ, 100 ரூபாய்க்கும், 200 முதல், 250 கிராம் எடை பழங்களை கிலோ, 110 ரூபாய்க்கும் கொள்முதல் செய்கின்றனர். முதல்கட்டமாக 1,100 கிலோ பழங்கள் அறுவடை செய்துள்ளோம்.இவ்வாறு அவர் கூறினார்.சோதனை முயற்சியாக மேற்கொண்ட ஹைபிரிட் மாதுளை சாகுபடி கைமேல் பலன் தந்துள்ளது கொளத்தூர் விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

### விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

தாராபுரம்: தாராபுரம் வேளாண்மை பொறியியல் துறை சார்பில், கரும்பு விவசாயிகளுக்கு, ஏழு நாள் சிறப்பு பயிற்சி முகாம் நடந்தது.முகாம் நிறைவு விழாவுக்கு, கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் வேலுச்சாமி தலைமை வகித்தார். கனரா பாங்க் மேலாளர் சீனிவாசன், பொறியாளர் பொன்னம்பலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில், நவீன தொழில் நுட்பங்கள், மண்ணின் காரத்தன்மை அறிதல், மகசூல் அதிகம் பெற கூடுதல் தகவல்கள் உட்பட பல்வேறு தகவல்கள் குறித்து பேசினர்.வீரண்ணன், யுவராஜா, ராஜேந்திரன், விஜயன் உட்பட பலர் ஆலோசனை வழங்கினர். அலங்கியம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முருங்கை விலை சரிவுகட்டு ரூ40ஆக குறைவு

ஈரோடு: கடும் பனியால், கடந்த மாதம், ஒரு கட்டு, 400 முதல், 500 ரூபாய் வரை விற்கப்பட்ட முருங்கைக்காய், சந்தைக்கு வரத்து அதிகரித்துள்ளதால், கட்டு, 40 ரூபாயாக சரிந்துள்ளது.பொதுவாக மற்ற காய்கறிகளை காட்டிலும், முருங்கைக்காய் சாம்பாருக்கு ருசியும், மணமும் தனி என்பதால், அனைத்து தரப்பு மக்களும் விரும்பி சாப்பிடுவர். தென்னிந்திய மக்கள் மட்டுமின்றி, வடமாநில

மக்களும் முருங்கையை சமையலுக்கு அதிகம் பயன்படுத்துவர். முருங்கைக்கீரையில், இரும்புசத்து உள்ளதால் ஆரோக்கியத்துக்கு நல்லது.

ஈரோடு மார்க்கெட்டுக்கு ஒட்டன்சத்திரம் சந்தையில் இருந்து, முருங்கை வரத்தாகிறது. மேலும் பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, பெருந்துறை உள்பட சுற்றுப்புற பகுதிகளில் இருந்து வருகிறது. மற்ற பகுதிகளை காட்டிலும், மூலனூர், காங்கேயம் முருங்கைக்காய் அதிக நீளம், திரட்சியுடன் சுவையாக இருக்கும் என்பதால், அதன் விலை சற்று அதிகமாக இருக்கும்.இதுகுறித்து வியாபாரி காஜா கூறியதாவது: கடந்த மாதம் ஜனவரியில், வரத்து வெகுவாக குறைந்து, 20 காய்கள் கொண்ட கட்டு, 400 முதல், 500 ரூபாய் வரை அளவுக்கு ஏற்ப விற்பனையானது. தற்போது, பனி குறைந்து, வெயில் காலம் துவங்கி உள்ளதால், அதிகளவில் காய் பிடித்துள்ளது.இதனால் ஒட்டன்சத்திரம் மட்டுமின்றி, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், முருங்கை வரத்தாகிறது. எனவே கட்டு, 50 முதல், 40 ரூபாய் வரை சரிந்துள்ளது. இதனால் மந்தமாக இருந்த விற்பனையும், தற்போது சூடுபிடித்துள்ளது. விலை சரிந்துள்ளதால், மக்கள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர், என்றார்.

### முதன்முறையாக வேகவதி ஆற்றில் களிமண் சுவர்:நிலத்தடி நீர் மட்டம் உயர புது முயற்சி

காஞ்சிபுரம் : நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த புது முயற்சியாக, மாவட்டத்தில் முதல் முறையாக வேகவதி ஆற்றில், பூமிக்குள் களிமண் சுவர் கட்டும் பணிகளை, பொதுப்பணித் துறை மேற்கொண்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், பருவ மழை பொய்த்ததன் காரணமாக, கடந்த பல ஆண்டுகளாக பாலாறு, வேகவதி, செய்யாறு உள்ளிட்ட ஆறுகள் வறண்டு விட்டன. இதனால், குடிநீர், விவசாயம் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளுக்கும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் பெறப்படுகிறது. இதன் காரணமாக, நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. பூமிக்குள் தடுப்புச் சுவர் இதனால், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த,

மாவட்டத்தில் முதல் முறையாக முசரவாக்கம் அருகே உள்ள மேட்டுக்குப்பம் பகுதியில் வேகவதி ஆற்றின் குறுக்கே, 120 மீட்டர் நீளம், 7 மீட்டர் ஆழத்திற்கு களிமண்ணால் சுவர் கட்டும் பணி துவக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டிற்குள் பணிகளை முடிக்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.இந்த பணிக்கு சிறப்பு நிதியாக 22 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.ஆந்திராவை

தொடர்ந்துஇதுகுறித்து, பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: ஆந்திரா மாநிலத்தில் உள்ள ஆறுகளில், களிமண்ணால் 'நீர் நெறிச் சுவர்'களை கட்டி, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தி வெற்றி பெற்றுள்ளனர். இதைத் தொடர்ந்து தருமபுரி மாவட்டத்தில், 'நீர் நெறிச் சுவர்' கட்டப்பட்டுள்ளது. இதனைப் பின் பற்றி, தமிழகத்திலும் இந்தத் திட்டம் சோத னை அடிப்படையில் வேகவதி ஆற்றின குறுக்கே, பூமிக்குள் களிமண்ணால் 'நீர் நெறிச் சுவர்' கட்டும் பணிகள் துவங்கப்பட்டு உள்ளன. களிமண்ணுக்குள் நீர் உட்புகாத தன்மை உடையது. ஆற்றில் சேரும் மழைநீர், வேறு பகுதிக்கு ஊடுருவிச் செல்வதைத் தடுத்து, நிலத்தடி நீர்மட்டம் உயரும். வேகவதி ஆற்றில் மேற்கொண்டுள்ள முயற்சியின் மூலம், திருப்புட்குழி, முசரவாக்கம், விஷார் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில், நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்பு உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**செஞ்சி மார்க்கெட் கமிட்டி நிர்வாகத்தினர் லட்சியம் : 10 ஆயிரம் மூட்டைகள் நனைந்த அவலம்**

செஞ்சி : செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் திறந்த வெளி களத்தில் ஏலத்திற்கு வைத்த 10 ஆயிரம் நெல் மூட்டைகள் மழையில் நனைந்தன. ஏலத்தில் விலை குறைந்ததால் விவசாயிகள் மறியல் செய்தனர். செஞ்சி மார்க்கெட் கமிட்டிக்கு சம்பா பருவ அறுவடை முடிந்து கடந்த இரண்டு மாதமாக நெல் வரத்து அதிகமாக இருந்தது. கடந்த மாதம் தினமும் 20 ஆயிரம் நெல் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. கடந்த சில நாட்களாக நெல் வரத்து சரிய துவங்கியது. நேற்று 10 ஆயிரம் நெல் மூட்டைகள் வந்தன.மேற்கூரை உள்ள ஏலக் களங்களில் வியாபாரிகளின் நெல் மூட்டைகளை இருப்பு வைத்துள்ளனர். இதனால் நேற்று வந்த நெல் மூட்டைகளை

நடை பாதையிலும், திறந்த வெளி களத்திலும் வைத்தனர்.

திடீர் மழை செஞ்சியில் நேற்று பாதியளவு நெல்லுக்கு வியாபாரிகள் விலை எழுதிய நிலையில், திடீரென காலை 9.30 மணிக்கு துவங்கி 10.30 மணி வரை மழை பெய்தது. இதனால் அனைத்து நெல் மூட்டைகளும் நனைந்தன.
தாழ்வான இடத்தில் வைத்திருந்த நெல் மூட்டைகளை சுற்றிலும் தண்ணீர் தேங்கியது. மழைக்கு பிறகு மீதம் இருந்த நெல்லுக்கு வியாபாரிகள் விலை எழுதினர்.
மழையினால் ஒரு மணி நேரம் தாமதமாக ஏலம் நடந்தது. ஏலம் முடிந்து விலை பட்டியல் ஒட்டியதும் மூட்டை ஒன்றுக்கு100 முதல் 300 ரூபாய் வரை விலை குறைவாக இருப்பதாக கூறி விவசாயிகள் செஞ்சி மார்க்கெட் கமிட்டி முன்பு திடீரென மறியல் செய்தனர்.
தகவலறிந்த செஞ்சி இன்ஸ்பெக்டர் சரவணன், சப் இன்ஸ்பெக்டர் மருதப்பன் மற்றும் போலீசார் மறியல் செய்தவர்களை கமிட்டிக்குள் அழைத்து சென்றனர். அங்கு மேற்பார்வையாளர் வளவனிடம், வியாபாரிகளுடன் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்ய கேட்டனர்.
பேச்சு வார்த்தை
மாலை 3 மணிக்கு வியாபாரிகள் சங்க நிர்வாகிகளுடன் தாசில்தார் புண்ணியகோட்டி பேச்சு வார்த்தை நடத்தினார். 6 மணிக்கு முடிந்த பேச்சு வார்த்தையில் நாளை (இன்று 18ம் தேதி) மீண்டும் விலை கொடுப்பது.
வியாபாரிகள் குடோன்களில் இருப்பு வைத்துள்ள மூட்டைகளை குறுகிய காலத்தில் வெளியே எடுப்பது என்றும் முடிவு செய்தனர். விவசாயிகளிடம் தகவல் தெரிவித்து கலைந்து செல்ல கேட்டு கொண்டனர். இன்று கொள்முதல் நிறுத்தம் நேற்று கொள்முதல் தடைபட்டதால் புதிதாக இன்று மூட்டைகளை அனுமதிக்க முடியாத நிலை உள்ளது. நாளை வழக்கம் போல் நெல் ஏலம் நடக்கும் என கமிட்டி நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.
500 ரூபாய் நஷ்ட ஈடு இது குறித்து மா.கம்யூ., வட்ட தலைவர் கோவிந்தசாமி கூறியதாவது: செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் விவசாயிகளின் நெல் மூட்டைகளுக்கு பாதுகாப்பு இல்லை. மழை வரும் போது நெல் மூட்டைகள் நனைவது வாடிக்கையாக உள்ளது.

மழை வந்தால் நெல் விலை மூட்டைக்கு 400 ரூபாய் வரை குறைவதுடன், விவசாயிகளின் சாக்கு பைகளும் மழையில் நனைந்து மக்கி வீணாகிறது. மார்க்கெட் கமிட்டி நிர்வாகத்தின் சீர்கேட்டாலேயே விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. எனவே மழையில் மூட்டை நனைந்தால் விவசாயிகளுக்கு இழப்பீடாக மார்க்கெட் கமிட்டி நிர்வாகம் மூட்டை ஒன்றுக்கு 500 ரூபாயை வழங்க வேண்டும். இதை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் போராட்டம் நடத்துவோம். இவ்வாறு கோவிந்தசாமி கூறினார்.

**தர்பூசணி விற்பனை படு ஜோர்**

சங்கராபுரம் : சங்கராபுரத்தில் தர்பூசணி விற்பனை படுஜோராக நடந்து வருகிறது. கோடை காலத்தில் பொது மக்கள் தாகத்தை தணிக்க அதிகளவில் தர்பூசணி வாங்குவார்கள்.

பங்குனி, சித்திரை மாதங்களில் தர்பூசணி விற்பனைக்கு வரும். தற்போது கோடைக்கு 2 மாதம் முன்பாகவே சங்கராபுரம் நகரில் தர்பூசணி விற்பனைக்கு வந்துள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து லாரி மூலம் விற்பனைக்கு வந்துள்ள தர்பூசணி ஒரு பழம் 15 முதல் 20 ருபாய் வரை விற்கப்படுகிறது. கோடை வெயிலின் தாக்கத்தை போக்கும் தர்பூசணியை சங்கராபுரம் பகுதி பொது மக்கள் அதிகளவில் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

**சொட்டு நீர்பாசனத்தில் விவசாயிகள் ஆர்வம் : கரும்பு பயிரை காப்பாற்ற நடவடிக்கை**

தியாகதுருகம் : பருவமழை 2 ஆண்டுகளாக பொய்த்து நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால் கரும்பு பயிரை காப்பாற்ற சொட்டுநீர் பாசன முறையை செயல்படுத்த விவசாயிகள் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். பருவமழை கடந்த 2 ஆண்டுகளாக ஏமாற்றியதால் நீர்நிலைகள் வறண்டு, நிலத்தடி நீர் மட்டம் "கிடுகிடு' வென குறைந்து வருகிறது. இது கிணற்று நீர்பாசனத்தை நம்பி பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஆண்டுப் பயிரான கரும்பு சாகுபடி செய்ய, தொடர்ந்து தண்ணீர் தேவைப்படுகிறது. கிடைக்கும் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது. பரப்பு அதிகரிப்பு

கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்னசேலம், தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதிகளில் கரும்பு சாகுபடி பரப்பு 3 ஆண்டுகளில் பல மடங்கு அதிகரித்துள்ளது. பருவ மழை பொய்த்ததால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலையில், கோடையில் போதிய நீர் பாய்ச்சினால் மட்டுமே பயிரை கருகாமல் காப்பாற்ற முடியும். இத்துடன் மின்வெட்டு பிரச்னையும் ஏற்பட்டால் கரும்புக்கு நீர்பாய்ச்சுவதில் சிக்கல் ஏற்படும். இதற்கு முன்னெச்சரிக்கையாக பயிர்களை பாதுகாக்க சொட்டு நீர் பாசன முறையை செயல்படுத்த இப்பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் கோடைகாலத்தில் நீர் பற்றாக்குறை ஏற்பட்டு இப்பகுதியில் 25 ஆயிரம் ஏக்கர் கரும்பு கருகியது. தீவைப்பு அவற்றை அகற்ற முடியாமல் சிலர் கருகிய கரும்பை தீயிட்டு கொளுத் திய அவலமும் நடந்தது. இந்த பிரச்னை இனியும் தொடராமல் இருக்க விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறைக்கு மாறி வருகின்றனர். அரசு வழங்கும் சலுகையை பயன்படுத்தி தங்கள் வயல்களில் இச்சாதனத்தை பொருத்த பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.சொட்டுநீர் பாசன சாதனத்தை அமைக்க விரும்புவோருக்கு தோட்டக் கலைத் துறை மானியம் வழங்குகிறது. குறு விவசாயிகளுக்கு முழு மானியத் தொகையான ஒரு ஏக்கருக்கு 43 ஆயிரத்து 816 ரூபாயும், பெரு விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்குகிறது. வேளாண்மை துறை பரிந்துரையில் பல விவசாயிகள் பலனடைந்து வருகின்றனர்.

பருவசீவல் முறை

இம்முறையால் 60 சதவீதம் தண்ணீரை சேமிக்க முடியும். வறட்சியான காலங்களில் சாகுபடி செய்த பயிரை கருகாமல் காப்பாற்ற சொட்டுநீர் பாசன முறை கைகொடுக்கிறது. தற்போது பருசீவல் முறையில் உற்பத்தி செய்யும் கரும்பு நாற்றுக்களை பயன்படுத்தி நடவு செய்வது விவசாயிகளிடம் பிரபலமாகி வருகிறது.இதனால் கரும்பு பருத்து வளரும் வரை சீரான தண்ணீர் தேவைப்படுகிறது. இச்சூழலில் தண்ணீர் பற்றாக் குறையால் நாற்றுக்கள் கருகும் அபாயம் உள்ளதால் இப்பிரச்னைக்கு சொட்டுநீர் பாசன முறை நல்ல தீர்வாக அமைந்துள்ளது. பருவமழை பொய்த்துள்ள நிலையில் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனமுறை வரப்பிரசாதமாக இருப்பதால் பலரும் இதை அமைப்பதில் ஆர்வம் காட்டி வருகின் றனர்.

ஊக்குவிப்பு அவசியம்

கள்ளக்குறிச்சி பகுதியில் கரும்பு சாகுபடி செய்துள்ள மொத்த பரப்பை கணக்கிடும் போது சொட்டு நீர் பாசனத்தை 5 சதவீதம் விவசாயிகள் கூட தங்கள் வயலில் அமைக்கவில்லை. கடந்த ஆண்டுகளில் நீர் பற்றாக்குறையால் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக தற்போது விவசாயிகளே முன்வந்து இச்சாதனத்தை

பொருத்துகின்றனர். இவர்களை வேளாண்துறையினர் ஊக்கப்படுத்தி அரசு சலுகையை பெற்று தந்தால் பலர் இதன் மூலம் பயனடைவார்கள்.

**'தினமலர்' செய்தி எதிரொலி: உலர் தீவனம் விற்பனை துவக்கம்**

திருத்தணி : 'தினமலர்' செய்தி எதிரொலியாக, கால்நடைகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் (வைக்கோல்) விற்பனை நேற்று துவக்கப்பட்டது. மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால், கால்நடைகளுக்கு தீவனம், பற்றாக்குறை அதிகரித்து வந்தது. இதையடுத்து, கால்நடைகளுக்கு மானிய விலையில், உலர் தீவனம் (வைக்கோல்) ஒரு கிலோ இரண்டு ரூபாய் என, விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்கு, வேளாண் துறை முடிவு செய்தது. இதற்காக, கும்மிடிப்பூண்டி, பூண்டி மற்றும் கனகம்மாசத்திரம் ஆகிய இடங்களில், கிடங்குகள் அமைக்கப்பட்டன. உலர் தீவனமும் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டது.

திட்டத்தைத் துவக்குவதற்கு, அமைச்சர் தேதி கிடைக்காததால், விற்பனை காலதாமதம் ஏற்பட்டது. இது குறித்தான செய்தி படத்துடன், கடந்த, 13ம் தேதி, 'தினமலர்' நாளிதழில் வெளியானது. இதையடுத்து, விவசாயிகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் விற்பனை செய்யும் திட்டம், நேற்று முன்தினம் மதியம், திருத்தணி அடுத்த கனகம்மாசத்திரம் கிடங்கில் நடந்தது. மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ் தலைமை வகித்தார். மாவட்ட கால்நடைத் துறை இயக்குனர் பன்னீர்செல்வம் வரவேற்றார். இதில், வைக்கோல் விற்பனைத் திட்டத்தைத் துவக்கி வைத்து, வருவாய்த் துறை அமைச்சர் ரமணா பேசும் போது, "கால்நடைகளை காப்பாற்ற, மானிய விலையில் வைக்கோல் திட்டத்தை ஏற்படுத்தி, முதல்வர் செயல்படுத்தி வருகிறார்.

ஒரு கிலோ, 7.50 ரூபாய்க்கு வாங்கி, மானிய விலையில், இரண்டு ரூபாய்க்கு தருகிறார்," என்றார். நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### குறைந்த செலவில் அதிக லாபம் தரும் கோஸ்

திருத்தணி : காய்கறி பயிர் வகைகளில், குறைந்த செலவில், அதிக லாபம் தரும் முட்டை கோஸை விவசாயிகள் ஆர்வத்துடன் பயிர் செய்து வருகின்றனர். திருத்தணி அடுத்த, லட்சுமாபுரம் கிராமத்தில் பெரும்பாலான விவசாயிகள் நெல், வேர்க்கடலைக்கு பதிலாக, காய்கறி தோட்டம் அமைத்துள்ளனர். குறைந்த செலவில் அதிக லாபம் தரும் பயிர் முட்டைகோஸ் பயிர், பெரும்பாலான விவசாயிகள் செய்துள்ளனர். இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண் துறை அலுவலர் ஒருவர் கூறியதாவது: முட்டை கோஸ் பயிரிட குறைந்த செலவும், தண்ணீர் பாய்ச்சுவதும் குறைவு. இப்பயிர், விதை விதைத்து, 30 - 45 நாட்களில் நாற்றை பிடுங்கி, செடிகளாக நிலத்தில் நட வேண்டும். இப்பயிரின் ஆயுட்காலம், மூன்று மாதம் ஆகும். ஒருமுறை மட்டுமே அறுவடை செய்யப்படும். ஒரு ஏக்கருக்கு, 25 - 35 டன் கோஸ் வரை கிடைக்கிறது. ஏக்கருக்கு குறைந்தபட்சம், 30 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு, 10 - 15 ஆயிரம் ரூபாய் மட்டுமே பயிரிட செலவாகும். குறைந்த செலவில், அதிக லாபம் தரும் முட்டை கோஸை அதிகளவில் விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

### வெண்பட்டுக்கூடு உற்பத்தியில் மிளிரும் உடுமலை

உடுமலை : வெண்பட்டுக்கூடு உற்பத்தியில், பல்வேறு மாநிலங்களுக்கு தொழில் நுட்பங்களை கற்றுத்தரும் தொழில் நுட்ப மையமாக, உடுமலை பகுதி மாறியுள்ளது. இதனால், உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்தியாவில் பட்டுத்துணி உற்பத்திக்கு தேவையான கச்சாப்பட்டு உற்பத்தியாவதில்லை. இதனால், சீனாவிலிருந்து ஆண்டுக்கு 9 ஆயிரம் மெட்ரிக் டன் வரை கச்சாப்பட்டு இறக்குமதி செய்யப்படுகிறது.இறக்குமதியை குறைத்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க, மத்திய அரசு பல்வேறு திட்டங்களை கடந்த

1992ம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகிறது. நூற்புத்திறன் அதிகமுள்ள வெண்பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்ய, ஜப்பான் நாட்டுடன், ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, சி.எஸ்.ஆர்., எனப்படும் கலப்பினம் உருவாக்கப்பட்டது. அதிக நூலிழை நீளம் கொண்ட இந்த கலப்பினத்தை பயன்படுத்தி, வெண்பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்ய 'ஜெய்க்கா' தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த தொழில்நுட்பம் கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரா உட்பட பல்வேறு மாநிலங்களில், அறிமுகப்படுத்தப்பட்டது. உடுமலை பகுதியில், கடந்த 2003ம் ஆண்டு மத்திய அரசின் பட்டு வாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் துவங்கப்பட்டது.

இந்த மையத்தின் வாயிலாக, புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு, 2006 ம் ஆண்டிலிருந்து வெண்பட்டுக்கூடுகளுக்காக, மல்பெரி நடவு செய்யும் பரப்பு 3 ஆயிரம் ஏக்கரை தாண்டியது. மேலும், நுாறு முட்டை தொகுதிக்கு, 85 கிலோ வெண்பட்டுக்கூடுகள் என்ற உற்பத்தியும் எட்டப்பட்டது. பல்வேறு மாநிலங்களை சேர்ந்த பிரதிநிதிகள் உடுமலை பகுதியில், வெண்பட்டுக்கூடு உற்பத்தி தொழில் குறித்து ஆய்வு நடத்தி சென்று வருகின்றனர்.

கடந்த சில மாதங்களில் மட்டும், மேகாலயா, அசாம், மணிப்பூர், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களைச்சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் உடுமலை பகுதிக்கு 'விசிட்'செய்து, வெண்பட்டுக்கூடு வளர்ப்பு குறித்து ஆய்வு நடத்தியுள்ளனர். மேலும், இத்தொழில் குறித்த பயிற்சியை அளிக்க தங்கள் பகுதிக்கு வருமாறு, விவசாயிகள், மத்திய பட்டு வாரியம் மற்றும் பட்டு வளர்ச்சித்துறை அதிகாரிகளுக்கும், அம்மாநிலங்கள் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மாநில அளவில், உற்பத்தியில் முன்னிலை வகித்த உடுமலை பகுதி தொழில்நுட்பங்களுக்காக தேசிய அளவில், தொழில் நுட்ப மையமாக மாறியுள்ளது, இப்பகுதி உற்பத்தியாளர்களை மகிழ்ச்சியடைய செய்துள்ளது. இது

குறித்து பட்டு வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறுகையில், 'உடுமலை பகுதியில் நிலவும் சீதோஷ்ண நிலை, வெண்பட்டுக்கூடுகள் உற்பத்திக்கு உதவுகிறது. மேலும், இங்குள்ள உற்பத்தியாளர்கள், விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை எளிதில் கற்றுக்கொண்டு, நடைமுறைப்படுத்துகின்றனர். இதனால், பல்வேறு மாநிலங்களை சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் மத்திய பட்டு வாரிய திட்டத்தின் மூலம் உடுமலை பகுதிக்கு வந்து செல்கின்றனர் ', என்றனர்.வெண்பட்டுக்கூடு உற்பத்தி செய்யும் விவசாயி ராமகிருஷ்ணன் கூறுகையில், "வெளிமாநில உற்பத்தியாளர்கள் உடுமலை பகுதியிலுள்ள புழு வளர்ப்பு மனை, இளம்புழு வளர்ப்பு மையம், மல்பெரி தோட்டம் ஆகியவற்றை ஆய்வு செய்து செல்கின்றனர்.

இதனால், தொழில்நுட்பங்களை முறையாக பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. நாட்டின் கச்சாப்பட்டு இறக்குமதியை குறைக்க உடுமலை பகுதி வெண்பட்டுத்தொழில் முன்னுதாரணமாக இருப்பது பெருமையளிக்கிறது," என்றார்.

**நலிந்த விவசாயத்தை காக்க அறிவிப்பு இல்லையே : இடைக்கால பட்ஜெட் தொடர்பாக பலரும் கருத்து**

விருதுநகர்: "நலிந்து வரும் விவசாயத்தை காக்க, பட்ஜெட்டில் அறிவிப்பு இல்லையே, "என, விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

லோக்சபா தேர்தல் தேதி, விரைவில் அறிவிக்கப்பட உள்ள சூழ்நிலையில், மத்திய அரசின் இடைக்கால பட்ஜெட்டை, நிதியமைச்சர் ப.சிதம்பரம் தாக்கல் செய்தார். பல்வேறு தரப்பில் இருந்தும், எதிர்ப்புக்குரல் கிளம்பியதால், அரிசி மீதான, சேவை வரி ரத்து செய்யப்படுமென அவர் அறிவித்தார். கல்விக்கடனுக்கு ரூ.57 ஆயிரம் கோடி நிதி, ராணுவத்திற்கு அதிகபட்ச நிதி, கல்விக்கடனில் வட்டிச்சலுகை, பெண்கள் பாதுகாப்பிற்கு ஆயிரம் கோடி, சென்னை பெங்களூரு தொழிலக சாலை,

வருமானவரி விதிப்பில் மாற்றமில்லை என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள், அதில் இடம் பெற்றிருந்தன. புதிய வரி விதிப்பு எதுவுமில்லை. கார், பைக், மொபைல், "டிவி', பிரிட்ஜ், சோப்பு உள்ளிட்டவற்றின் மீதான வரிகுறைக்கப்பட்டதால், அதன் விலைகளும் குறைய வாய்ப்புள்ளது. இதுஒருபுறம் இருந்தாலும், விலைவாசியை குறைக்கவும், நலிந்துள்ள விவசாயிகளை காப்பாற்றுவது தொடர்பாக எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இல்லை என்ற குற்றம் சாட்டும் எழுந்துள்ளது. ஒரு சிலர், பட்ஜெட்டை வரவேற்றபோதும், பெரும்பாலானோர் ஏமாற்றம் அளிக்கும் பட்ஜெட்டாக உள்ளதாக, கருத்து தெரிவித்துள்ளனர்.விருதுநகர் லாரி புக்கிங் ஆபீஸ் உரிமையாளர் சங்க பொருளாளர் ஸ்ரீனிவாசன்,"" தென்னிந்தியாவின் முக்கிய உணவுப்பொருளான அரிசிக்கு, சேவை வரி விதிக்கப்பட்டபோது, பல தரப்பில் இருந்தும் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. அதனால், அந்த சேவை வரி ரத்து செய்யப்படுமென, மத்திய அரசின் இடைக்கால பட்ஜெட்டில், நிதியமைச்சர் சிதம்பரம் அறிவித்துள்ளார். இது, லோக்சபா தேர்தல் ஓட்டுக்காகத்தான். வாகனங்களின் மீதான வரியை குறைத்ததன் மூலம், ஏராளமானோர் புதிய வாகனங்களை வாங்க வாய்ப்புள்ளது. ஆனால், அவை செல்லும் அளவிற்கு ரோடுகள் தரமானதாக இல்லை. அதேநேரம், அவற்றில் பயன்படுத்தப்படும் எரிபொருள் விலை, ராக்கெட் வேகத்தில் அடிக்கடி உயர்த்தப்படுவது ஏற்கத்தக்க தல்ல. நலிந்துவரும் விவசாயத்தை மேம்படுத்தி, விவசாயிகளை காப்பாற்றுவது குறித்த எந்த அறிவிப்பும் இல்லை. கடுமையாக உயர்ந்துவரும் விலைவாசியை கட்டுப்படுத்த நடவடிக்கை இல்லை. மொத்தத்தில், ஏழைஎளிய, நடுத்தர மக்களின் வாழ்வை மேம்படுத்த போதுமான அறிவிப்புகள் இடம்பெறவில்லை. இது ஏமாற்றத்தரும் பட்ஜெட்<,"என்றார்.

சிவகாசி சி.இ.ஓ., தி கிரியேட்டிவ் டெக்ஸ்டியூர் ஆர்.பாலாஜி, ""புதிதாக தொடங்கும் தொழிற்சாலைகளுக்கான இந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கான எக்ஸைஸ் வரியை, 1 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைத்தது, புதிய தொழிற்சாலைகள் வருவதற்கான வாய்ப்புகளை, அதிகப் படுத்தி உள்ளது.15 பில்லியன் அமெரிக்க டாலரை கையிருப்பாக வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும், பொருளாதார வளர்ச்சியில் காணப்படவில்லை. அவை வெறும் கண்துடைப்பு அறிவிப்பு போல் உள்ளது,"என்றார்.

காரியாபட்டி பெண்கள் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் திலகவதி,"" அரிசிக்கு சேவை வரி ரத்து வரவேற்கதக்கது. கல்விக்கடன், பெண்கள் முன்னேற்றத்திற்கான மேம்பாட்டு நிதியை தவிர, மற்ற திட்டங்கள் எல்லாம், மக்களுக்கு பயனற்ற, குறிப்பாக தமிழகத்தை வஞ்சிக்கும் திட்டமாக உள்ளது. மக்கள் உணவிற்கே திண்டாடும் போது, சொகுசு கார், இரு சக்கர வாகனங்களுக்கு, கலால் வரியை குறைத்திருக்கிறார்கள். இதனால் ஏழை மக்களுக்கு என்ன பயன். விவசாயிகள் மழையின்றி தவிக்கும் போது, ஏற்கனவே வாங்கிய கடனை கட்ட முடியாமல், சிரமப்பட்டு வருகின்றனர். மீண்டும் விவசாயக் கடன் வழங்கப்படும் என்கின்றனர். வாங்கிய கடனை கட்டாமல், எப்படி மீண்டும் விவசாய கடன் கிடைக்கும். மக்களை வஞ்சிக்கும் பட்ஜெட்டாக உள்ளது. திருப்தி இல்லை," என்றார்.

ராஜபாளையம் தொழில் வர்த்தக சங்க செயலாளர் எம்.சி.வெங்கடேஸ்வர ராஜா,"" அரிசி மற்றும் மருத்துவத்திற்கு சேவை வரி ரத்து செய்தது, வரவேற்கத்தக்கது. டூ வீலர்களுக்கு உற்பத்தி வரி குறைத்ததால், நடுத்தர மக்களுக்கு நன்மை. மாணவர்களுக்கு கல்வி கடன் வட்டியை குறைத்தது, பெற்றோரின் பாரத்தை குறைத்தது போல உள்ளது. சூரிய மின்சக்தி உற்பத்திக்கு பெருமளவு நிதி ஒதுக்கியது,எதிர்காலத்தில் மின்தட்டுப்பாட்டை போக்கலாம். தொழில் வளர்ச்சி அடைய வாய்ப்பு உள்ளது. இது அறிவிப்புடன் இல்லாமல், முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, எல்லோரிடத்திலும் உள்ளது. விவசாயம், நடுத்தர மக்கள், மாணவர்கள் என பலரை ,திருப்திபடுத்தும் வகையில் பட்ஜெட் உள்ளது. வரி இல்லாத பட்ஜெட் என, பலர் பாராட்டுகின்றனர். என்னை பொறுத்தவரை, வரும் தேர்தலை மனதில் முன்னிறுத்தி, கவனமாக போடப்பட்ட பட்ஜெட் என்றே கூறுவேன்,"என்றார்.

**கைகொடுத்தான் தெளிப்பான்: பயிரை காக்க வழி**

விருதுநகர்: விருதுநகர்மாவட்டத்தில், கடந்தாண்டும் வடகிழக்கு பருவமழை கைவிட்டதால், தண்ணீர் இன்றி கருகிவரும் பயிர்களை காப்பாற்ற, "மெத்தலோ பாக்டீரியா' என்ற கைத்தெளிப்பான் பயன்படுத்தப்படுகிறது.

விருதுநகர்மாவட்டத்தின் ஆண்டின் சராசரி மழையளவு 811.70 மி.மீ., வடகிழக்கு பருவமழை ஏமாற்றியதால், கடந்தாண்டு 625.46 மி.மீ., மட்டுமே மழை பெய்தது. மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பு 1 லட்சத்து 14 ஆயிரத்து 700 எக்டேர். இதில், 2013- 2014ல், 16 ஆயிரத்து 14 எக்டேரில் நெல், 42 ஆயிரத்து 389 எக்டேரில் சிறுதானியம், 8,136 எக்டேரில் பயறு வகைகள், 7,821 எக்டேரில் எண்ணெய் வித்துக்கள், 8,412 எக்டேரில் பருத்தி, 2,273 எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டன. ஆனால், மழை குறைந்து, கண்மாய், குளம், கிணறு உள்ளிட்ட நீர்நிலைகள் வறண்டதால், தண்ணீரின்றி, இப்பயிர்களின் வளர்ச்சி கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால், மாவட்டத்தில் தொடர்ச்சியாக 2வது ஆண்டும் வறட்சி ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கருகிய பயிர்கள் குறித்து வேளாண்துறையினர், வருவாய்த்துறையினர் கணக்கெடுப்பு மேற்கொள்ள உள்ளனர். இதனிடையே, தண்ணீரில் இல்லாமல் வாடும் பயிர்களை காப்பாற்ற, "மெத்தலோ பாக்டீரியா' ஸ்பிரே(கைத் தெளிப்பான்), தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதை, தண்ணீருடன் கலந்து 1 ஏக்கருக்கு 200 எம்.எல்.,தெளித்தால், அங்கு, 15 நாட்களுக்கு, தண்ணீர் பாய்ச்ச வேண்டாம். அதற்குள் தண்ணீருக்கு மாற்று ஏற்பாடு செய்யலாம். லிட்டர் 300 ரூபாய்க்கு, மதுரை விவசாய கல்லூரியில் விற்கப்படுகிறது. மாவட்டத்தில் இதுவரை 50.7 ஏக்கர் பயிர்களை காக்க, இது பயன்படுத்தப்பட்டுள்ளது .

"கடந்த ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காரீப் பருவத்தில், மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் மூலம், 3,133 எக்டேர் நெல், மக்காச்சோளம், கரும்பிற்கு, 2,958 விவசாயிகள், 9 லட்சம் ரூபாய் காப்பீடு செய்துள்ளனர். இத்தொகையில் 50 சதவீத பிரீமியத்தை, அரசு செலுத்தும். அதாவது, காப்பீட்டுத்தொகை 18 லட்சம் ரூபாய்.

ராபி பருவமான அக்டோபர் முதல் மார்ச் வரை, நெல், மக்காச்சோளம், கரும்பு, எள், நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களுக்கு, மார்ச் மாதம் வரை, விவசாயிகள் காப்பீடு செய்யலாம். அதற்கான தொகை விபரங்களை, காப்பீடு திட்ட பணியாளர் கண்ணனிடம், 97911 23984 ல் தெரிந்து கொள்ளலாம்,'என, வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பூச்சி கொல்லி விற்பனை: கலெக்டர் எச்சரிக்கை** தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில், வேளாண்மைத்துறையின் சார்பில், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி விற்பனையாளர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்த கருத்தரங்கம் நடந்தது.

கலெக்டர் விவேகானந்தன் கருத்தரங்கை துவக்கி வைத்து, பேசியதாவது: உரம் மற்றும் பூச்சிக்கொல்லி உரிமம் பெறாமல், விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றம். உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளை விவசாயப் பயன்பாட்டுக்கு மட்டும் தான் விற்பனை செய்ய வேண்டும். விற்பனை செய்யும் போது, வாங்குபவரின் பெயர், முகவரி, பயிர், பரப்பு, கையொப்பம் மற்றும் மொபைல்ஃபோன் எண்ணை வாங்கிக் கொண்டு தான் விற்பனை செய்ய வேண்டும். விற்பனை செய்யும்போது கண்டிப்பாக ரசீது வழங்க வேண்டும். விற்பனை ரசீதினை உரிய படிவத்தில் பராமரிக்க வேண்டும்.

உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் இருப்பு மற்றும் விலை விபரம் குறித்த தகவல் பலகை அனைவரது பார்வையிலும் தெரியும்படி வைக்க வேண்டும். இருப்புப் பதிவேடு மற்றும் கொள்முதல் பட்டியல்களை, 10 ஆண்டுகளுக்கு பராமரிக்க வேண்டும். விற்பனை உரிமத்தில் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து மட்டும் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் கொள்முதல் செய்து விற்பனை செய்ய வேண்டும்.

மாதந்தோறும், 15ம் தேதி வரையுள்ள விற்பனை மற்றும் இருப்பு விவரத்தினை அந்தந்த பகுதி வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கு, விற்பனையாளர்கள் தவறாமல் அனுப்ப வேண்டும். தடை செய்யப்பட்ட பூச்சிக்கொல்லியினையும், காலாவதியான மருந்துகளையும் விற்பனை செய்ய கூடாது. இவ்விதிமுறையை மீறுவோர் மீது, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும், என்றார். இந்நிகழ்ச்சியில், எஸ்.பி., ஆஸ்ராகர்க், வேளாண்மை இணை இயக்குனர் மோகன், துணை இயக்குனர்கள் வேணுகோபால், பாஸ்கர், கமலா மற்றும் வேளாண்மை அலுவலர்கள், தர்மபுரி மாவட்ட பூச்சிக் கொல்லிமருந்து மற்றும் உரம் விற்பனையாளர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**வெளிநாட்டு தாவரங்களின் ஆக்கிரமிப்பு :விலங்குகளின் வாழ்விடங்களுக்கு ஆபத்து**

ஊட்டி : "வெளிநாட்டு தாவர இனங்களின் வளர்ச்சியால், வன விலங்குகளின் வாழ்விடங்கள் சுருங்க துவங்கிவிட்டன' என, தெரிவிக்கப்பட்டது.

வனத்துறை சார்பில், "நீலகிரி சோலைகளின் மறுமலர்ச்சி' குறித்த கருத்துரங்கு, நேற்று ஊட்டியில் நடந்தது. மாவட்ட வடக்கு வனக்கோட்ட வன அலுவலர் சுகிர்தராஜ் கோயில்பிள்ளை வரவேற்றார். கருத்தரங்கை துவக்கி வைத்து, மலரை வெளியிட்டு, குன்னூர் "டான் டீ' நிர்வாக இயக்குனர் டாக்டர் பாலாஜி பேசியதாவது:

இயற்கையில் இருந்து மனிதனை பிரிக்க முடியாது; இயற்கையை சார்ந்து தான் நாம் வாழ வேண்டும். மக்கள் தொகை பெருக்கத்தால் வன நிலங்களின் மீதான அழுத்தம் அதிகரித்துள்ளதால், சோலைகளின் பரப்பு குறைந்து விட்டது. இந்த சோலைகளின் உருவாக்கம் மெதுவாகவே நடக்கிறது. கடந்த 1840ம் ஆண்டிலிருந்து நீலகிரியில் கற்பூரம், சீகை உட்பட மரங்கள் நடவு செய்யப்பட்டன. இவை, இயற்கை சமநிலையை பாதித்ததால், கடந்த 1988ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வன கொள்கையில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள சோலைகள், புல்வெளிகளை பாதுகாக்க வலியுறுத்தப்பட்டது. அதனடிப்படையில், தற்போது, கற்பூரம் மற்றும் சீகை மரங்கள் அகற்றப்பட்டு வருகின்றன; இப்பணி மிகக் கடுமையானது. சீகை மரங்களை, தொடர்ந்து மூன்றாண்டுகள் அப்புறப்படுத்தினால் தான் அவற்றை முற்றிலுமாக அழிக்க முடியும். இவ்வாறு, பாலாஜி பேசினார்.

கோவை மண்டல வனப்பாதுகாவலர் கந்தசாமி தலைமை வகித்து பேசுகையில், ""மாநில அரசின் முயற்சியால் நீலகிரியில் வனங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. நீலகிரி மற்றும் பழநியில் 6,500 எக்டரில் சோலைகள் உள்ளன. வனப்பாதுகாப்பு காரணமாக வன உயிரினங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இருப்பினும், சோலைகளில் வெளிநாட்டு தாவரங்களான சீகை,

கற்பூரம், உண்ணி செடிகள், பார்த்தீனியம் போன்ற செடிகள் அதிகளவில் ஆக்கிரமித்ததால், வன விலங்குகளின் வாழ்விடங்கள் சுருங்க துவங்கி வருகின்றன. இது ஆபத்தான மாற்றமாகும். இதனால், விலங்குகள் தங்கள் வாழ்விடங்களிலிருந்து வெளியேறுகின்றன; மனித- விலங்கு மோதல் ஏற்படுகிறது.எனவே, விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்தும் நோக்கில், சோலைகளை ஆக்கிரமித்துள்ள அன்னிய நாட்டு தாவரங்களை அகற்றும் முயற்சி கடந்த 20 ஆண்டுகளாகநடந்து வருகிறது," என்றார். மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் சீனிவாச ரெட்டி, பாரதியார் பல்கலைக்கழக தாவரவியல் துறை பேராசிரியர் டாக்டர் ராமச்சந்திரன் உட்பட பலர் பேசினர். தெற்கு வனக்கோட்ட வன அலுவலர் பத்ரசாமி நன்றி கூறினார்.

**நீரின்றி கருகிய செடிகளால்... பாதிப்பு வறட்சியின் பிடியில் விவசாயிகள்**

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் பகுதியில் நிலவும் வறட்சி காரணமாக அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த கத்தரி, காலிபிளவர் கருகியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள பகுதிகளில் விவசாயமே முக்கிய தொழிலாக இருந்து வருகிறது. குறிப்பாக இப்பகுதியில் காய்கறிகள் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. தொடர்ந்து 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்துப் போனதால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. பல கிராமங்களில் ஆயிரம் அடிக்கும் கீழ் போர் போட்டும் தண்ணீர் கிடைக்கவில்லை.
காவேரியம்மாபட்டி, தேவத்தூர் பகுதிகளில் காலிபிளவர், கத்தரி மற்றும் மிளகாய் செடிகள் மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பில் போர்வெல்லில் இருந்த சொற்ப நீரைக்கொண்டு நடப்பட்டன. அவை அறுவடைக்கு வரும் சமயத்தில் வறட்சி அதிகரித்ததால் போர்வெல்களில் இருந்த சிறிது நீரும் வற்றியது.நீர்பாய்ச்ச முடியாததால், பல ஏக்கர் பரப்பில் நடப்பட்டிருந்த அத்தனை செடிகளும் அடிக்கும் வெயிலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் கருகிவிட்டன. செடிகள் கருகியதால் அறுவடை செய்யப்படும் நிலையில் இருந்த காலிபிளவர், கத்தரிக்காய், மிளகாய் காய்ந்தன.நட்ட பயிர்கள் அனைத்தும் அறுவடைக்கு வராததால் விவசாயிகள்

மிகுந்த சிரமத்தில் உள்ளனர். இவர்களுக்கு காலம் தாழ்த்தாமல் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

### கிராமங்களுக்கு செல்லும் ஆவின் அதிகாரிகள்

தேவதானப்பட்டி: ஆவின் பால் அதிகாரிகள், கிராமங்களில் உள்ள சிறிய பால் வியாபாரிகளை சந்தித்து, திட்டத்திற்கு பால் அனுப்ப ஏற்பாடு செய்து வருகின்றனர்.

மாவட்டத்தில், விவசாயம் முக்கியத் தொழிலாக உள்ளதால், அதோடு இணைந்த கால்நடை வளர்ப்பிலும், ஆர்வம் காட்டி வருகின்றனர். கிராமங்களில் உள்ள சிறிய பால் வியாபாரிகள் மூலம் ஆவின் நிறுவனத்திற்கு பால் கொள் முதல் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது கடும் வறட்சி நிலவி வருகிறது. கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனம் கிடைக்கவில்லை. மேய்ச்சல் நிலங்கள் வறண்டுள்ளன. இதனால் பால் உற்பத்தி அதிகளவு குறைந்துள்ளது. இதனால், ஆவின் திட்டத்திற்கு பால் கொள்முதலும் குறைந்துள்ளது. இதனை ஈடுகட்டி, கொள்முதலை அதிகரிப்பதற்காக, ஆவின் அதிகாரிகள் கிராமங்களை முற்றுகையிட்டு வருகின்றனர். ஒவ்வொரு கிராமமாக சென்று அங்குள்ள சிறிய பால் வியாபாரிகளை சந்தித்து, திட்டத்திற்கு பால் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்து வருகின்றனர்.

### வாழை சாகுபடியில் நவீன தொழில் நுட்பம் வட மாநிலம் சென்ற கம்பம் விவசாயிகள்

கம்பம்: வாழை சாகுபடியில், நவீன தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்ள, கம்பம் பகுதி விவசாயிகளை, வட மாநிலத்திற்கு தோட்டக்கலைத்துறையினர் அழைத்துச் சென்றனர்.

தேனி மாவட்டத்தில் வாழை, திராட்சை, கரும்பு, தென்னை, கொய்யா, மா உள்ளிட்ட பல வகை தோட்டக்கலை பயிர்கள், அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. திராட்சையும், வாழையும் அதிக பரப்பில் விரும்பி சாகுபடி செய்யப்படுகிறது. சமீபத்தில் வாழை சாகுபடியில் சாதனை செய்த குருநாதன்,

பரமசிவம் உள்ளிட்ட சில விவசாயிகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.
இந்நிலையில், வாழை சாகுபடியை மேம்படுத்த திட்டமிட்ட
தோட்டக்கலைத்துறை, பஞ்சாப் மாநிலத்தில் சண்டிகார் அருகில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ள பகுதிக்கு விவசாயிகளை அழைத்துச் சென்றனர். கம்பம் வட்டாரத்தில் இருந்து, வாழை விவசாயிகள் 10 க்கும் மேற்பட்டோரை, தோட்டக்கலைத்துறையினர் அழைத்து சென்றனர்.
இந்த சுற்றுப்பயணத்தில், வாழை சாகுபடியில் பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை தெரிந்து கொண்டதாக, விவசாயிகள் கூறியுள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உணவு, உரம்,எரிபொருள் மானியத்துக்கு ரூ.2.46 லட்சம் கோடி**



உணவு, உரம் மற்றும் எரிபொருள் மானியத்துக்கு அடுத்த நிதியாண்டில் ரூ.2 லட்சத்து 46 ஆயிரத்து 397 கோடியை நிதியமைச்சர் சிதம்பரம் ஒதுக்கியுள்ளார். சோனியாவின் கனவு திட்டமான தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்துவதற்காக உணவு மானியம் ரூ.23 ஆயிரம் கோடியிலிருந்து ரூ.1 லட்சத்து 15 ஆயிரம் கோடியாக உயத்தப்பட்டுள்ளது. எரிபொருள் மானியத்துக்கு ᑱ65 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2014-15ம் நிதியாண்டில் திட்டமிடா செலவுகளுக்கு ரூ.12 லட்சத்து 7 ஆயிரத்து 892 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து உணவு, உரம் மற்றும் எரிபொருள் மானியத்துக்கு ரூ.2 லட்சத்து 46 ஆயிரத்து 397 கோடி செலவிடப்படும்.

**மேட்டூருக்கு நீர்வரத்து குறைந்தது**



மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 50.89 அடியாக சரிந்துள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து மிகவும் கு றைந்து உள்ளது. நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 149 கனஅடி தண்ணீர் வருகிறது. மேட்டூர் அணையில் இருந்து 11 மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 600 கனஅடி நீர்

திறக்கப்படுகிறது. மேட்டூர் அணையின் நீர் மட்டம் 50.89 அடியாக உள்ளது. அணையின் நீர் இருப்பு 18.37 டிஎம்சியாக உள்ளது.

**நாமக்கல் முட்டை விலை 310 காசுகளாக அதிகரிப்பு**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 310 காசுகளாக அதிகரித்துள்ளது. நாமக்க ல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில், பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் முட்டை பண்ணை கொள்முதல் விலையில் 10 காசுகள் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து ஒரு முட் டையின் பண்ணை கொள்முதல் விலை 300 காசில் இருந்து 310 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை அதிகரித்து வருவதால், விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.47, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.66 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (பைசாவில்) பெங்களூரு- 320, மைசூர்- 327, ஐதராபாத்- 300, மும்பை- 338, விஜயவாடா-300, கொல்கத்தா- 370, பர்வாலா- 310, டெல்லி- 323 காசுகள்.

**முர்ரா மாடு மூலம் ரூ40 லட்சம் வருவாய்**



மொகாலி: முர்ரா இன மாட்டின் உரிமையாளர் அதன் விந்தணுவை விற்று ஆண்டுக்கு ரூ 40 லட்சம்  வரை வருவாய் ஈட்டி வருகிறார். குருஷேத்ராவைச் சேர்ந்த கரம்வீர் சிங், யுவராஜ் என்ற பெயரில் முர்ரா இன மாட்டினை வளர்த்து வரு கிறார். அந்த மாட்டின் ஒரு டோஸ் செமனைரூ 300க்கு விற்கிறார். இதன் மூலம் உருவாக்கப்படும் மாடு கள், பால் சுரக்கும் காலத்தில் 4 ஆயிரம் லிட்டர்கள் வரை கறக்கிறது.

மற்ற மாடுகள் 2 முதல் 2500 லிட்டர்கள் மட்டுமே பால் கறக்கிறது என்கிறார் பஞ்சாப் மாநில பால்  உற்பத்தி கமிஷனை சேர்ந்த நிபுணர் குர்ரா. ஐந்தரை வயதான இந்த மாட்டின் விந்தணுவை பெற உத் தரபிரதேசம், பஞ்சாப், அரியான, ராஜஸ்தான் உட்பட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மாட்டு பண்ணை உரிமையாளர்கள் பெறுவதற்காக வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மாவட்டத்தில் கடும் வறட்சி காய்கறி சாகுபடி 40 சதவீதம் பாதிப்பு**

கோவை,: கோவை மாவட்டத்தில் வறட்சி, நீர் பற்றாக்குறையால் காய்கறி சாகுபடி 40 சதவீதம் குறைந்தது.

கோவை மாவட்டத்தில் 3.73 லட்சம் எக்டரில் விவசாய நிலப்பரப்பு இருக்கிறது. இதில் 20 ஆயிரம் எக்டரில் பயிறு வகைகளும், 50 ஆயிரம் எக்டரில் சிறு தானியங்களும், 26 ஆயிரம் எக்டரில் எண்ணெய் வித்து பயிர்களும், 35 ஆயிரம் எக்டரில் தோட்டக்கலை பயிர்களும் 1 லட்சம் எக்டரில் தென்னை, 10 ஆயிரம் எக்டரில் கரும்பு, பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது.

கடந்த 2 ஆண்டுகளாக கடும் வறட்சி காரணமாக நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காசோளம் சாகுபடி பரப்பு குறைந்தது. கடந்த மாத நிலவரப்படி 1,595 எக்டரில் நெல், 26,061 எக்டரில் சோளம், 68 எக்டரில் கம்பு, 15 எக்டரில் கேழ்வரகு, 4,829 எக்டரில் மக்காசோளம் பயிடப்பட்டிருந்தது. இந்த மாதம் சிறு தானிய பயிர் சாகுபடி பரப்பு மேலும் 30 சதவீதம் குறையும் வாய்ப்புள்ளது.

தக்காளி 1,871 எக்டரிலும், வெங்காயம் 793 எக்டரிலும், மிளகாய் 402 எக்டரிலும், கத்தரி 306 எக்டரிலும், மஞ்சள் 1,048 எக்டரிலும், வாழை 5,491 எக்டரிலும், மரவள்ளி 298 எக்டரிலும் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த 2010ம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டில் ஜனவரி மாதம் காய்கறி பயிர் வகைகளின் சாகுபடி பரப்பு 40 சதவீதம் குறைந்துள்ளது.

நடப்பாண்டில் புதிதாக வாழை, தென்னை, கரும்பு, பருத்தி, மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். கோவை மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஓரளவு நிலத்தடி நீர்வளம் இருந்ததால் கிணற்று பாசனத்தின் மூலம், வாழை, மஞ்சள், கரும்பு போன்ற பணப்பயிர் மற்றும் காய்கறி உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தி வந்தனர்.

தற்போது கடும் வறட்சியாலும், நிலத்தடி நீர் மட்டம் சரிவினாலும் கிணற்று நீர் பெற முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். அதிக தண்ணீர் தேவைப்படும் பயிர் சாகுபடியை கைவிட்டு குறைந்த தண்ணீர் தேவைப்படும் மாற்று பயிர் திட்டத்தை செயல்படுத்த விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தண்ணீர் பற்றாக்குறையால் ஆலாந்துறை, தொண்டாமுத்தூர், மத்வராயபுரம், தென்கரை,

மாதம்பட்டி, வாளையார், மாவுத்தம்பதி பகுதியில் திராட்சை விளைச்சல் வெகுவாக சரிந்து விட்டது. விவசாயிகள் காய்கறி, தென்னை, வாழை, கரும்பு சாகுபடி குறைத்து விட்டதால் விவசாய விளை பொருட்களின் விலை உயரும் வாய்ப்புள்ளது.

**மழையால் அழுகிவிடுமோ என தர்பூசணி விவசாயிகள் கவலை**

திருப்போரூர், : திருப்போரூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழை காரணமாக அந்த பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள தர்ப்பூசணி காய்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர், தண்டலம், பையனூர், காரணை, குன்னப்பட்டு, மானாம்பதி, அருங்குன்றம் உள்ளிட்ட பல பகுதிகளில் தர்பூசணி பயிரிட்டுள்ளனர். கோடை காலத்தில் பயிரிடப்படும் தர்ப்பூசணி தற்போது அறுவடைக்கு தயாராக இருந்தன.

இந்நிலையில், திருப்போரூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்தது. இதனால் தர்ப்பூசணி செடிகளில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. தண்ணீர் நின்றால் கொடிகள் அழுகிவிடும். தர்ப்பூசணி காய்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் நிலைமை உருவாகி உள்ளது. இதுபற்றி விவசாயிகள் கூறுகையில், பருவமழை பொய்த்ததால் நெல் பயிரிட முடியாமல் தர்ப்பூசணி பயிரிட்டுள்ளோம். அதிக தண்ணீர் பட்டால் கொடிகள் அழுகிவிடும். தற்போது மழை பெய்து தண்ணீர் தேங்கி உள்ளதால் தர்ப்பூசணி காய்கள் அழுகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றனர்.

**தரமற்ற விதை விற்றால் நடவடிக்கை விற்பனையாளர்களுக்குஎச்சரிக்கை**

உடுமலை, : தனியார் விதை விற்பனையாளர்கள் தரமற்ற விதைகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விதை ஆய்வு துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.இதுகுறித்து விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி

நடேசன் விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:
உடுமலை, மடத்துக்குளம், குடிமங்கலம், பெதப்பம்பட்டி பகுதியில் உள்ள தனியார் விதை விற்பனையாளர்கள் நடப்பு பருவத்திற்கு விற்பனை செய்ய உள்ள காய்கறி விதைகளை நல்ல முளைப்பு திறன் உள்ளதாக இருக்க வேண்டும்.
அரசு அறிவுறுத்தியுள்ள விவரங்கள் அடங்கிய அட்டையை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் விதைப்பையில் இணைத்திருக்க வேண்டும். விவர அட்டையில் குறிப்பிடாத விதைகளை விற்பனை செய்ய கூடாது. தரமற்ற விதைகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் கூறப்பட்டுள்ளது.

**கீரனூரில் ரூ.10 லட்சத்தில் கால்நடை தீவன கிடங்கு திறப்பு அமைச்சர்கள் பங்கேற்பு**

புதுக்கோட்டை, : கீரனூரில் ரூ.10 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட கால்நடைத் தீவன கிடங்கு திறப்பு விழா நடைபெற்றது.
இவ்விழாவிற்கு டி.ஆர்.ஓ. மாரிமுத்து தலைமை வகித்தார். இதில் அமைச்சர்கள் சுப்பிரமணியன், விஜயபாஸ்கர் ஆகியோர் கலந்துகொண்டு கால்நடைத் தீவன கிடங்கினை திறந்து வைத் தனர். விழாவில் அமைச்சர் சுப்ரமணியன் பேசுகையில், தமிழக முதல்வர் கால்நடைகளுக்கும் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார். திறக்கப்பட்ட இத்தீவனக் கிடங்கில் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு அதிகபட்சமாக 5 கால்நடைகளுக்கு மானிய விலையில் 1 கிலோ ரூ.2 வீதம் 3 கிலோ வீதம் வழங்கப்படுகிறது. இதனை விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு கால்நடைகளின் வளர்ச்சியைப் பெருக்கியும், பால்வளத்தை பெருக்கியும் தங்களை பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றிக் கொள்ள வேண்டும் என்றார்.
அமைச்சர் விஜயபாஸ்கர் பேசுகையில், அனைத்து மாவட்டங்களிலும் புதிதாக கால்நடைத் தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் கீரனூர், விராலிமலை, கோமாபுரம், ஆலங்குடி, அறந்தாங்கி,

திருமயம், பொன்னமராவதி உள்ளிட்ட 7 இடங்களில் ரூ.70 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்கள் மிகக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதனை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி கால்நடை உற்பத்தியை பெருக்கிட வேண்டும் என்றார்.

விழாவில் கால்நடைத்துறை இணை இயக்குநர் மகாலிங்கம், உதவி இயக்குநர் டேனியல் தாமஸ், பேரூராட்சித்தலைவர் பவுன்ராஜ், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் துரைராஜ், ஆத்மா குழுத்தலைவர் சாம்பசிவம், ஊராட்சித்தலைவர் ராமசாமி, தாசில்தார் கோவிந்தராஜன், ஒன்றியக்குழு உறுப்பினர் போசங்கு, நிலவள வங்கித்தலைவர் கருப்பையா, கால்நடை மருத்துவர்கள், பணியாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**பூம்புகாரில் இலவச மீன்வளர்ப்பு பயிற்சி துவக்க விழா**

பூம்புகார்,: நாகை மாவட்டம் பூம்புகார் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் இலவச மீன்வளர்ப்பு பயிற்சி துவக்க விழா நடைபெற்றது. பூம்புகார் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையம் சார்பில் இலவச மீன்வளர்ப்பு பயிற்சி நேற்று துவங்கியது. இப்பயிற்சி 6 நாட்கள் நடைபெறுகிறது. துவக்க விழாவிற்கு பூம்புகார் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன மைய தலைவர் கிருஷ்ணன் தலைமை வகித்தார். ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குனர் பரமசிவன் முன்னிலை வகித்தார். ஆராய்ச்சி மைய முதுநிலை ஆராய்ச்சியாளர் செல்வராசு வரவேற்றார். முகாமில் மீன்வளர்ப்பது பற்றியும், மீன்களுக்கு கொடுக்கக்கூடிய உணவு வகைகளின் தரம் பற்றியும், மீன்களின் சீதோஷ்ண நிலைக்கேற்ப அவைகளை பராமரிப்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. நிறைவுநாள் முகாமில் (22ம்தேதி) நாகை மாவட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மண்டல மேலாளர் சிவகாமி கலந்து கொண்டு பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குகிறார். பூம்புகார், காவிரிப்பூம்பட்டினம், மேலையூர், வானகிரி, நெய்தவாசல்,

நாயக்கர்குப்பம், புதுக்குப்பம் மற்றும் பல பகுதிகளை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர். ஆராய்ச்சியாளர் கணபதிராமன் நன்றிகூறினார்.

## உழவின்றி நேரடி விதை விதைக்கும் கருவி விவசாயிகளுக்கு செயல் விளக்கம்

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டம் அருகேயுள்ள சூரியமணல் கிராமத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில் உழவின்றி நேரடியாக விதை விதைக்கும் கருவி குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.
ஜெயங்கொண்டம் அடுத்த சூரியமணல் கிராமத்தில் விவசாயி கோபாலகிருஷ்ணனின் வயலில் உழவின்றி நேரடி விதை விதைக்கும் கருவி மற்றும் சட்டி கலப்பையால் உழவு செய்தல் ஆகியன குறித்து விவசாயிகளுக்கு நேரடியாக செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.
நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் வேளாண் பொறியியல் துறை இளநிலைப் பொறியாளர் கலைமணி தலைமையில் பங்கேற்ற பொறியாளர்கள் அலாவுதீன், பிரேம்குமார், நடராஜன், ராஜராம் ஆகியோர் இந்த செயல் விளக்கத்தை அளித்தனர்.
இதில் சூரியமணல் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள கிராம விவசாயிகள் திரளாகக் கலந்துகொண்டு பயன்பெற்றனர். மேலும், முன்னோடி விவசாயிகள் தத்தனூர் செல்வராஜ், சூரியமணல் ராமநாதன், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதுகுறித்து பொறியாளர் கலைமணி கூறியதாவது: இந்த இயந்திரத்தின் துணையுடன் விதைப்பதன் மூலம் நாள் ஒன்றுக்கு **5** ஏக்கர் அளவில் விதைப்பு செய்ய முடியும். இதன் காரணமாக ஆட்கள் பற்றாக்குறையை தவிர்க்க முடியும். மேலும் சரியான இடைவெளியில் விதைப்பு செய்யமுடியும் என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சேவை வரி ரத்து எதிரொலி; தமிழகத்தில் அரிசி விலை குறையுமா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு**

சென்னை,

சேவை வரி ரத்து செய்யப்பட்டுள்ளதையடுத்து, தமிழகத்தில் அரிசி விலை குறையுமா? என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

<u>அரசியல் கட்சி தலைவர்கள் வலியுறுத்தல்</u>

நெல்லுக்கு வரி விலக்கும், அரிசிக்கு சேமித்து வைக்கும் கிடங்கு வாடகை, போக்குவரத்து வசதி சேர்த்து 12.35 சதவீதம் சேவை வரியை மத்திய அரசு விதித்ததால், அரிசி விலை 'கிடுகிடு'வென உயரும் அபாயம் ஏற்பட்டது.

இதையடுத்து தி.மு.க. தலைவர் கருணாநிதி அரிசி மீதான சேவை வரிக்கு கண்டன அறிக்கையை வெளியிட்டதுடன், திருச்சியில் நடைபெற்று முடிந்த தி.மு.க. 10–வது மாநில மாநாட்டிலும் அரிசி மீதான சேவை வரியை மத்திய அரசு நீக்க வேண்டும் என்று தீர்மானமும் கொண்டு வந்தார்.

விவசாயிகள், வியாபாரிகள், பொதுமக்கள் நலன் கருதி முதல்–அமைச்சர் ஜெயலலிதாவும் அரிசி மீதான சேவை வரிக்கு கண்டனம் தெரிவித்ததோடு, உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் எழுதினார்.

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உள்பட தமிழக அரசியல் கட்சி தலைவர்களும், அரிசி வியாபாரிகளும், விவசாயிகளும் அரிசி மீதான சேவை வரியை உடனடியாக விலக்கி கொள்ள வேண்டும் என்று மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தினர்.

<u>பட்ஜெட்டில் நீக்கம்</u>

இதையடுத்து நேற்று தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில், ‘அரிசி சேமித்து வைக்கப்படும் கிடங்குகளுக்கான சேவை வரி ரத்து செய்யப்படுகிறது என்றும், சேவை வரி விகிதம் வேளாண் பொருட்கள் பட்டியலில் இருந்து அரிசிக்கு விலக்கு அளிக்கப்படுகிறது என்றும்’ மத்திய நிதி மந்திரி ப.சிதம்பரம் அறிவித்தார்.

அரிசி மீதான சேவை வரி விலக்கி கொள்ளப்பட்டதை விவசாயிகளும், அரிசி வியாபாரிகளும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

<u>ஜெயலலிதாவுக்கு பாராட்டு</u>

தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி மொத்த வணிகர் சங்கங்களின் சம்மேளன தலைவர் டி.துளசிங்கம் ‘தினத்தந்தி’ நிருபரிடம் கூறியதாவது:–

அரிசி வியாபாரிகளின் நலனை கருத்தில் கொண்டு முதல்–அமைச்சர் ஜெயலலிதா, அரிசி மீதான சேவை வரியை நீக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் எழுதி, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்ததன் காரணமாகவே, அரிசி மீது விதிக்கப்பட்டிருந்த சேவை வரி ரத்து செய்யப்பட்டுள்ளது. இதற்காக முதல்–அமைச்சர் ஜெயலலிதாவை எங்கள் சங்கத்தின் சார்பில் மனதார பாராட்டுகிறோம்.

அரிசிக்கு சேவை வரி ரத்து செய்யப்பட்டிருப்பதால் பெருமளவு வரிச்சுமை குறைந்துள்ளது. இதன்மூலம் பாமர மக்கள் பெரிதும் பயன் அடைவார்கள். மத்திய தொகுப்பில் இருந்து அரிசி பெறும் மாநில அரசுகளுக்கும் பெருமளவு வரிச்சுமை குறையும்.

இவ்வாறு டி.துளசிங்கம் கூறினார்.

<u>ரூ.10 கோடி வரிச்சுமை குறையும்</u>

அரிசி மீது விதிக்கப்பட்டிருந்த 12.35 சதவித சேவை வரியின் படி, அரிசி கிடங்கு வாடகை ரூ.1 லட்சம் என்றால், ரூ.12 ஆயிரத்து 350 ஆயிரம் வரியாகவும்,

போக்குவரத்து வாடகை ரூ.10 ஆயிரம் என்றால் ரூ.1,230 வரியாகவும் வியாபாரிகள் செலுத்த வேண்டி இருந்தது.

தற்போது வரி விலக்கி கொள்ளப்பட்டதையடுத்து, ஒட்டுமொத்த அரிசி வியாபாரிகளுக்கு மாதம் தோராயமாக ரூ.10 கோடி அளவுக்கு வரிச்சுமை குறைந்துள்ளது. இதன் மூலம் அரிசி விலை குறைவதற்கு வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசுகள் உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று ஒரே நாளில் 10 காசுகள் உயர்ந்து 310 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக சரிவடைந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 10 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 3 ரூபாயில் இருந்து 310 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிறமண்டலம்

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:- சென்னை-335, ஐதராபாத்-300, விஜயவாடா, தனுகு-300, பார்வாலா-310, மும்பை-338, மைசூர்-327, பெங்களூர்-320, கொல்கத்தா-370, டெல்லி-323. கறிக்கோழி கிலோ ரூ.66-க்கும், முட்டைக்கோழி கிலோ ரூ.54-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

கொல்கத்தா, பார்வாலா போன்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்து உள்ளது. அதற்கு தகுந்தாற்போல் நாமக்கல் மண்டலத்திலும் விலை உயர்த்தப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். கடந்த காலங்களில் முட்டைவிலை குறைக்கப்பட்டதால் தமிழகம் மற்றும் கேரளாவில் விற்பனை சற்று

உயர்ந்து இருப்பதும், தற்போதைய விலை உயர்வுக்கு ஒரு காரணம் என கூறப்படுகிறது.

## தஞ்சையில் இருந்து தர்மபுரிக்கு சரக்குரெயில் மூலம் 1,870 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டன

தஞ்சாவூர்,

தஞ்சையில் இருந்து தர்மபுரிக்கு சரக்குரெயில் மூலம் 1,870 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டன.

நெல் அரவை

தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்குவதற்காக தஞ்சை மாவட்டத்தில் 402 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல் மூட்டைகள் அங்கேயே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

அதன்படி நேற்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் அரவைக்காக லாரியில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்பு அங்கு நின்ற சரக்கு ரெயிலில் நெல் மூட்டைகள் அனைத்தும் ஏற்றப்பட்டன. மொத்தம் 41 வேகன்களில் 46 ஆயிரத்து 740 நெல் மூட்டைகள் அடங்கிய 1,870 டன் நெல் ஏற்றப்பட்டன. பின்பு நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து தர்மபுரிக்கு அரவைக்காக கொண்டு செல்லப்பட்டன.

# நெல்லிக்குப்பம் பகுதியில் திடீர் மழை

கடலூர்,

நெல்லிக்குப்பம், அண்ணாகிராமம், மேல்பட்டாம்பாக்கம் ஆகிய பகுதிகளில் நேற்று பிற்பகலில் வானத்தில் கருமேகங்கள் திரண்டு வந்ததால் மழைக்கான அறிகுறிகள் காணப்பட்டது. இதையடுத்து சிறிது நேரம் மழை பெய்தது. இந்த திடீர் மழையால் அப்பகுதியில் குளுமையான காலநிலை காணபட்டது. இந்த மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை தந்தது.

இதேபோல் கடலூரில் சாவடி, செம்மண்டலம் பகுதியிலும் நேற்று பிற்பகல் 3 மணி அளவில் லேசான மழைத்தூறல்கள் விழுந்தன. இதனால் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது.

விழுப்புரம் மாவட்டத்தில் திடீர் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

திண்டிவனம்,

விழுப்புரம் மாவட்டத்தில் பெய்த திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சிய டைந்துள்ளனர்.

<u>விழுப்புரத்தில் திடீர் மழை</u>

விழுப்புரம் பகுதிகளில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் மளமளவென குறைந்தது. விவசாய நிலங் களில் மானாவரி பயிர் சாகுபடி செய்திருந்த விவசாயி கள் மழை பெய்யாதா? என்ற ஏக்கத்தில் இருந்தனர்.

இந்நிலையில் விழுப்புரத் தில் நேற்று வழக்கம்போல் காலையில் இருந்தே வெயில், பொதுமக்களை வாட்டி வதைத்தது. பகல் 12 மணியளவில் வானில் கரு மேக கூட்டங்கள் சூழ்ந்து காணப்பட்டது. அடுத்த சில நிமிடங்களில் திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. இந்த மழை இடைவிடாமல் சுமார் ½ மணி நேரத்திற்கும் மேலாக பலத்த மழையாக கொட்டி தீர்த்தது. இதனால் சாலைகளில் மழைநீர் ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. இம் மழையினால் ஓரளவு வெப்பம் தணிந்ததால் பொது மக்கள் மிகவும் மகிழ்ச்சிய டைந்தனர்.

<u>திண்டிவனம்</u>

இதேபோல் திண்டி வனத்தை அடுத்த இறை யானூர், எடையான்குளம், மொளசூர், கோவடி, ஓமந்தூர், குரு வம்மாபேட்டை, எண்டியூர், முன்னூர் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் மதியம் 11.45 மணியளவில் திடீரென மழை பெய்தது. சுமார் அரை மணி நேரம் பெய்த மழையால், கடும் வறட்சியில் இருந்த பூமி குளிர்ந்தது. இந்த மழையினால் மானாவரி பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

<u>மேல்மலையனூர்</u>

இதேபோல் செஞ்சியில் காலை 9.45 மணி முதல் 10.15 மணி வரை பரவலாக மழை பெய்தது. பருவ மழை பொய்த்துப்போன நிலையில் திடீரென பெய்த மழையால் பொதுமக்களும், விவசாயி களும் மகிழ்ச்சி யடைந்துள் ளனர். மேல்மலையனூர் பகுதியில் நேற்று காலை 9.15 மணி முதல் 9.30 மணி வரை பரவலாக மழை பெய்தது. இந்த மழையினால் மானாவரி பயிரான மணிலா, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர் களை சாகுபடி செய் துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர்.

## இறைச்சிக்கூடங்களை நவீனப்படுத்த மானியம் வேளாண் அதிகாரி தகவல்

விழுப்புரம்,

தேசிய உணவு பதப் படுத்தும் இயக்கத்தின் கீழ் இறைச்சிக்கூடங்களை நவீனப்படுத்த வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் மானியம் வழங்கப் படுகிறது.

<u>மானியம்</u>

இதுகுறித்து விழுப்புரம் வேளாண் வணிக துணை இயக்குனர் சண்முகம் வெளி யிட்டுள்ள ஒரு செய்திக் குறிப்பில் கூறியிருப்ப தாவது:–

இறைச்சிக்கூடங்களை நவீனப்படுத்துவதற்கு தேவை யான உள்கட்டமைப்பு மற்றும் கருவிகள் வழங்கி ஒட்டுமொத்த சுகாதார அடிப்படையில் மேம்படுத்தி நுகர்வோர் களுக்கு ஆரோக்கிய இறைச்சி வழங்க வேண்டும்.

இந்த குறிக்கோளுடன் அரசு, பொதுத்துறை நிறுவனங் கள், கூட்டு நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், சுய உதவிக்குழுக்கள், தனியார் நிறுவனங்கள், தனி நபர்களுக்கு தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம் மூலம் மானியம் வழங்கப்படுகிறது. நிதி உதவி கோரும் விண் ணப்பதாரர்கள் மாநில உணவு பதப்படுத்தும் இயக்கத்திற்கு விண்ணப்பத்தை சமர்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் ஷ்ஷ்ஷ்.னீஷீயீஜீவீ.ஸீவீநீ.வீஸீ என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள லாம்.

மேலும் விவரங்களுக்கு வேளாண் வணிக துணை இயக்குனர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகம் முதல் மாடி, நேருஜி ரோடு, விழுப்புரம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## புதிய வரிகள் இல்லை: மத்திய இடைக்கால பட்ஜெட் தாக்கல்

2014 ஜூலை மாதம் வரைக்கான மத்திய இடைக்கால பட்ஜெட்டை நிதியமைச்சர் ப.சிதம்பரம் மக்களவையில் திங்கள்கிழமை தாக்கல் செய்தார். இந்த பட்ஜெட்டில் புதிய வரிகள் விதிக்கப்படவில்லை.

அரிசி மீதான சேவை வரி ரத்து செய்யப்பட்டுள்ளது. நான்கு சக்கர, இருசக்கர வாகனங்கள், செல்போன் மற்றும் சோப்பு உள்ளிட்ட நுகர்வோர் பொருள்கள் மீதான உற்பத்தி வரி குறைக்கப்பட்டுள்ளது.

இதேபோல் டி.வி., பிரிட்ஜ், கம்ப்யூட்டர்கள், பிரின்டர்கள், டிஜிட்டல் கேமரா, மைக்ரோவேவ் ஓவன், டி.வி.டி. பிளேயர்ஸ் ஆகிய வற்றின் மீதான உற்பத்தி வரி 12 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இவற்றின் விலை குறையும். ரத்த வங்கிகள் மீதான 12 சதவீத சேவை வரி நீக்கப்பட்டுள்ளது.

**வருமான வரியில் மாற்றம் இல்லை**

வருமான வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்படவில்லை. எனினும் ஆண்டுக்கு ரூ.1 கோடிக்கு மேல் வருவாய் ஈட்டும் செல்வந்தர்களுக்கு விதிக்கப்படும் 10 சதவீத கூடுதல் வரி இந்த ஆண்டும் தொடர்கிறது. ராணுவ வீரர்களின் ஊதிய முரண்பாட்டைக் களையும் வகையில் அவர்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வரும் ஒரே பதவி, ஒரே ஓய்வூதியம் கோரிக்கை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ராணுவத்துக்கான நிதி 10 சதவீதம் அதிகரிக்கப்பட்டு ரூ.2,24,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்விக் கடன் பெற்றுள்ள சுமார் 9 லட்சம் மாணவர்கள் பயன் அடையும் வகையில் ரூ.2600 கோடி வட்டித் தொகையை அரசே செலுத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டம்சாராத செலவினங்கள் ரூ.12,07,892 கோடியாக மதிப்பிடப் பட்டுள்ளது. இதில் உணவு, உரம், எரிபொருள் மானியத்துக்கு ரூ.2,46,397 கோடி.

**பொருளாதார நிலை**

பட்ஜெட் உரையின்போது நிதியமைச்சர் ப. சிதம்பரம் மேலும் கூறியதாவது:

2008 செப்டம்பர் முதல் சர்வதேச பொருளாதார நெருக்கடியால் அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் சில நாடுகள் மட்டுமே கடும் பொருளாதார நெருக்கடியிலும் சீரான வளர்ச்சியில்

முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அந்த வரிசையில் இந்தியாவும் இணைந்துள்ளது.

**எதிர்கால இலக்குகள்**

விலைவாசி உயர்வு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு, அதிக முதலீட்டை ஈர்ப்பது, உற்பத்தித் துறையை மேம்படுத்துவது, ஏற்றுமதியை ஊக்குவிப்பது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது அவசியம். பெட்ரோலியம், எரிசக்தி, நிலக்கரி, நெடுஞ்சாலை, ஜவுளி துறைகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியதும் அவசியமாகும்.

**வேளாண் உற்பத்தி அபாரம்**

வேளாண் துறையில் மகத்தான சாதனை படைத்துள்ளோம். ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி 4.6 சதவீதமாக உள்ளது. கடந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி 255.36 டன்னாக இருந்தது. நடப்பாண்டில் இது 263 டன்னாக உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதார நெருக்கடியிலும் இந்தியாவின் சேமிப்பு விகிதாச்சாரம் நடப்பாண்டில் 35.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. சுரங்கம், உற்பத்தித் துறைகளை தவிர இதர துறைகளில் முதலீடுகள் திருப்திகரமாக உள்ளன.

சர்வதேச வர்த்தகம் பெரும் சரிவைக் கண்டுள்ள போதிலும் இந்திய ஏற்றுமதி படிப்படியாக மீண்டு வருகிறது. இந்த ஆண்டு இறுதியில் இந்திய ஏற்றுமதி 6.3 சதவீத வளர்ச்சியுடன் 326 பில்லியன் டாலரை தாண்டும் என்று நம்புகிறேன்.

**பத்தாண்டில் 10 கோடி பேருக்கு வேலை**

உற்பத்தித் துறை முதலீடு தொடர்ந்து கவலையளிப்பதாக உள்ளது. எனினும் இத்துறையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல புதிய இலக்குகள்

நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அடுத்த 10 ஆண்டுகளில் இத்துறையில் 10 கோடி பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

**சென்னை-பெங்களூர் தொழில் மேம்பாட்டு சாலை**

சென்னை-பெங்களூர், பெங்களூர்- மும்பை, அமிர்தசரஸ்- கோல்கத்தா நகரங்களுக்கு இடையே தொழில் மேம்பாட்டு சாலைகள் அமைப்பதற்கான திட்டப் பணிகள் நடந்து வருகின்றன. உருக்கு, சிமென்ட், சுத்திகரிப்பு, எரிசக்தி, எலக்ட்ரானிக்ஸ் துறைகள் மற்றும் சிறு, குறு, நடுத்தர தொழில்களை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**உள்கட்டமைப்பு மேம்பாடு**

நாட்டின் உள்கட்டமைப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது 29,350 மெகாவாட் அளவுக்கு கூடுதலாக மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. 3928 கி.மீ. தொலைவுக்கு புதிதாக தேசிய நெடுஞ்சாலை, 39,144 கி.மீ. தொலைவுக்கு ஊரகச் சாலைகள், 3343 கி.மீ. தொலைவுக்கு புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. துறைமுகங்களின் சரக்கு கையாளும் திறன் 217.5 மில்லியன் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 7 புதிய விமான நிலையங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

**ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி**

சர்வதேச பொருளாதார நெருக்கடியால் இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 2011-12 ஆண்டில் 7.5 சதவீதத்தில் இருந்து 4.4 சதவீதமாகக் குறைந்தது.

எனினும் அரசின் தீவிர முயற்சியால் தற்போது 4.8 சதவீதமாக உள்ளது. இந்த நிதியாண்டின் இறுதியில் 5.2 சதவீதமாக உயரும்.

**நிர்பயா நிதிக்கு கூடுதலாக ரூ.1000 கோடி**

பெண்களின் பாதுகாப்புக் காக நிர்பயா நிதித் திட்டத்துக்கு ஏற்கெனவே ரூ.1000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்காக மேலும் ரூ.1000 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்றார் ப. சிதம்பரம்.

## அரிசி மீதான சேவை வரி ரத்து: மத்திய இடைக்கால பட்ஜெட்டில் அறிவிப்பு

மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம்

தமிழகத்தில் இருந்து கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், அரிசி மீதான சேவை வரியை ரத்து செய்து, மத்திய இடைக்கால பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் இன்று 2014-15 ஆம் ஆண்டுக்கான மத்திய இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.

அப்போது, "அரிசியை சேமிப்புக் கிடங்குகளில் சேகரித்தல், சேமித்தல், மூட்டை கட்டுதல், ஏற்றி இறக்குதல் போன்றவற்றிற்கு சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நிதிச் சட்டம் 2012-ல் குறிப்பிடப்பட்டுள்ள வேளாண் பொருட்கள் பற்றிய விளக்கம் மற்றும் வரி விலக்கு பட்டியலுக்கேற்ப சேமிப்பு மற்றும் சேகரித்தல், சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அதில், அரிசி சேர்க்கப்படவில்லை. இப்பொழுது அரிசிக்கும் இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது" என்றார் ப.சிதம்பரம்.

முன்னதாக, அரசி மீதான சேவை வரியை ரத்து செய்ய வேண்டும் என திமுக தலைவர் கருணாநிதி மத்திய அரசை வலியுறுத்தினார். நேற்று நடைபெற்ற திருச்சி மாநாட்டிலும் இது தொடர்பான தீர்மானத்தை திமுக நிறைவேற்றியது.

மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், அரிசி மீதான சேவை வரியை கைவிட வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்வர் ஜெயலலிதா கடிதம் மூலம் வலியுறுத்தினார்.

பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்த தேமுதிக தலைவர் விஜயகாந்த், இதே கோரிக்கையை அப்போது அவரிடம் முன்வைத்தார்.

இதேபோல், மதிமுக பொதுச் செயலர் வைகோ, பாமக நிறுவனர் ராமதாஸ் உள்ளிட்ட தமிழகத் தலைவர்கள் தொடர்ச்சியாக அரசி மீதான சேவை வரியை ரத்து செய்ய வலியுறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.